உ

ஓம்

பரப்பிரஹ்மணே நம:

ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

தொகுதி 5 | சித்தார்த்தி ௵ மாசி ௴ ௧௳
1920 ௵ பிப்ரவரி ௴ 13௳ | பகுதி 8

12 MAR 1920

கடவுள் வணக்கம்.

கருமருவு குகையனைய காயத்தி னடுவுட்
களிம்பு தோய் செம்பனைய யான்
காண்டக விருக்கநீ ஞானவனன் மூட்டியே
கனிவுபெற உள்ளுருக்கிப்
பருவம தறிந்துநின் னருளான குளிகைகொடு
பரிசித்து வேதி செய்து
பத்துமாற் றுத்தங்க மாக்கியே பணிகொண்ட
பட்சத்தை யென்சொல் லுகேன்.
அருமைபெறு புகழ்பெற்ற வேதாந்த சித்தாந்த
மாதியா மந்த மீதும்
அத்துவித நிலையரா யென்னையாண் டுன்னடிமை
யானவர்க ளறிவி னூடும்
திருமருவு கல்லா லடிக்கீழும் வளர்கின்ற
சித்தாந்த முத்தி முதலே
சிரகிரி விளங்கவரு தட்சிணா மூர்த்தியே
சின்மயா னந்த குருவே.

அளியுங் கனியொத் தருவினையா னைந்தயர் வுறுவேன்
தெளியும் படிக்குப் பரிபாக காலமுஞ் சித்திக்குமோ
வொளியுங் கருணையு மாருத வின்பமு மோருருவாய்
வெளிவந் தடியர் களிக்கநின் றூடும் விழுப்பொருளே.

அடையார் புறஞ்செற்ற தேவேநின் பொன்னடிக் கன்புசற்றும்
படையாத வென்னைப் படைத்திந்தப் பாரிற் படர்ந்தவினைத்
தடையாற் றளைவிட்டு நெஞ்சம் புண்ணாகத் தளரவைத்தா
யுடையா யுடைய படியன்றி யான்செய்த தொன்றிலையே.

ஆனந்தபோதினி

சித்தார்த்தி௵ மாசிமீ கஉ

பக்தி.

அச்சமும் மரியாதையும் கூடிய அன்பிற்கே பக்தியென்று பெயர். கடவுள், ஆசான், பெற்றோர் அவர்களுக்குச் சமதையான மூத்தோர்கள், ஆகிய இவர்களெல்லாம் அத்தகைய அன்பிற் குரியவர்களே. ஆயினும் கடவுளிடத்தும், ஞானாசிரியரிடத்தும் வைக்கும் இத்தகைய அன்பிற்கே பக்தி என்று பெரும்பாலும் கூறுவது.

சுயநலம் சற்றுங்கருதாது, ஒன்றையுங் கோராது வைக்கும் பக்தியே பயன்றரும் சரியான பக்தியாகும். அத்தகைய பக்தியே பிறப்பிறப்பையும் ஒழித்து முத்தி யின்பத்தை யளிக்க வல்லது. ஆனால் இத்தகைய பக்தி மிக்க அருமை. உலகில் ஈசுவரனைப் பூசிப்போரிற் பெரும்பாலார் ஏதாவதொரு கோரிக்கையின் நிமித்தமாகவே பூசிக்கிறார்கள். அதிலும் ஏதோ ஒரு காரியசித்தியின் பொருட்டாக அச்சமயம்மட்டும் கடவுளைத் துதித்து, "சுவாமீ, என்னுடைய கப்பலில் ஐந்துலட்சரூபாய் மதிப்புள்ள சரக்குகள் ஏற்றப்பட்டிருக்கின்றன. இப்போ தடிக்கும் புயற்காற்றால் என்கப்பல் ஒரு தீங்குமடையாமல் சரக்குகளோடு க்ஷேமமாய் வந்து சேர்ந்தால் தங்கள் கோயில் மூலவர் எதிரில் எரிவதற்காக இருநூறு ரூபாயில் ஒரு சொக்க வெள்ளித் திருவிளக்குச் செய்து சமர்ப்பிக்கிறேன், ஐந்நூறு தேங்காய்கள் உடைக்கிறேன்" என்று பிரார்த்தனை செய்துகொள்கிறான். இவன் செய்கையைச் சற்று கவனித்துப் பார்த்தால், இத்தகைய செய்கைகளால் கடவுள் ஒருபோதும் திருப்தியடையமாட்டாரென்று நன்கு விளங்கும். இவன் கப்பல் கடலில் நூற்றுக்கணக்கு அல்லது ஆயிரக்கணக்கான மையில்கள் தூரத்திலிருக்கிறது. கடும்புயற்காற்றில் கொந்தளிக்கும் கடலில் சிக்கிக்கொண்டு தத்தளிக்கும் கப்பலை முழுகிவிடாது நிலைநிறுத்தி அதிலுள்ள 5 - இலட்சரூபா மதிப்புள்ள சரக்குகளோடு அதைக்கொண்டுவந்து கரைசேர்த்தால் இருநூறு ரூபாபெறும் வெள்ளி விளக்கு கொடுப்பதோடு ஐந்நூறு தேங்காய்களும் உடைக்கிறானாம்- இவன் கடவுளுக்குவைக்கும்

வேலைக்கும், பதிலுக்குக் கொடுப்பதாய்க் கூறும் கூலிக்கும் எவ்வளவு வித்தியாச மிருக்கிற தென்பதைச் சற்று கவனித்துப் பாருங்கள். இவன் ஆண்டவனைத் தன்போன்ற மூடமனிதரிலும் தாழ்ந்தவராகவல்லவோ கருதியிருக்கிறான். இரவுபகல் என்கிற பேதமின்றி எங்கும் பிரகாசமாய் ஏகமாய் நிறைந்து நிற்பவரும், தன் பிரகாசத்தால் யாவற்றையும் விளக்கிவைப்பவருமாகிய அவருக்கு இவன் தீபம் என்னபயனைத் தரும்? இவன் உடைக்கும் தேங்காய்களில் ஒரு கடுகளவேனும் அவர் புசிக்க உதவுகிறதோ. அவருக்கு உணவுப் பொருளேன்? யாவும் தானாயிருப்பவர்க்கு எதுதான் தேவை? அவனது உண்மையன்பர்களே அவனருளால் எதிலும் விருப்பு வெறுப் பில்லாதவர்களாய்ப் பூரணத்திருப்தியடைந்தவர்களா யிருக்கிறார்களென்றால், அத்தகைய ஆண்டவனுக்கு என்னதான் வேண்டியிருக்கும். இத்தகைய பக்திகளால் ஒரு பயனுமில்லை. உண்மையான பக்தி ஒன்றுக்கே அவர் வசப்படுவார். மற்றப்படி எவ்விதமாய்த்தான் அவர்மேல் பக்திவைப்பதெனின்;—

"நாம் செய்துள்ள பூர்வ கன்மப்பலன் படிக்கு ஆண்டவன் முன்னமே யாவும் அமைத்து வைத்திருக்கிறான். அதில் ஒரு மாறுதலும் உண்டாகாது? யாவும் அந்த அமைப்பி லுள்ளபடியேதான் நடக்கும். அவையாவும் நாமாகச்செய்த வினைகளே யாதலின் அவற்றைப் பொறுமையோடு அனுபவித்தே தீரவேண்டும்" என்ற தீர்மானத்தோடு இகலோக பரலோக போகபாக்கியங்களைப் பற்றி ஆண்டவனை யொன்றுமே கேட்காமல், அவனை யடையவேண்டும் என்ற ஒன்றிற்காக மட்டுமே அவனிடம் மனப்பூர்வமான பக்தி செலுத்துதல் வேண்டும்.

பக்தியின் விசேஷம்

ஒருவன் தன் நிஜ சொரூபத்தைக் கண்டுகொண்டால்தான் அவன் ஆண்டவன் சொரூபத்தையும் உணர்வான் என்றும், அதனால் மோக்ஷமடைவா னென்றும் வேதங்கூறுவதோடு ஆன்றோர்களும் கூறியுள்ளார்கள். தன்னை யறியவேண்டில் மனம் ஒடுங்கவேண்டும். அதாவது மனம் ஒரேவிடத்தில் நிலைப்பட்டு நிற்கவேண்டும். அதற்கு ஏகாக்கிர சித்தம் என்று பெயர். பக்தியே அந்த ஏகாக்கிர சித்தத்தை யளிக்கும்

அன்புவைப்பது, அல்லது பக்திவைப்பது என்று கூறும்போதே நம்மையன்றி இரண்டாவதாக ஒருவஸ்து வேண்டும் என்று ஏற்படுகிறது. நம்மையன்றி கடவுள் என்ற ஒருபொருள் முன்னிலையாய் உளது என்ற நம்பிக்கையோடேயே பக்தியைத் தொடங்க வேண்டும். கடவுளிடம் வைக்கும் அந்த அன்பு முதிரமுதிர மனம் அந்த ஒன்றிலேயே நிலைத்து நின்று கரைந்துகரைந்து கடைசியில்

அன்புருவமேயடையும்போது முன்னிலையில் சுட்டியிருந்த பொருளும் அந்த அன்பிற் கரைந்துபோக இரண்டாக இருந்த நிலை போய்விடத் தொடங்கும்.

இந்தவிடத்திலேயே அத்துவிதம் தரிசனமாவது. ஆனால் இங்கு சில சந்தேகங்களும், இதனால் உலகிற் சிலரால் ஏற்படும் சச்சரவுகளும் கூட நேரிடுகின்றன. ஆயினும் அனுபவிகளாகிய அறிவாளிகள் அத்தகைய சச்சரவுகளில் சிக்கார்களென்று ஆன்றோர்களாகிய மகான்கள் அருளியுள்ளார்கள்.

அத்துவிதம் என்பதன் பொருள் இரண்டல்ல என்பது. ஒன்றேயென்று கூறாமல் இரண்டல்லவென்று கூறப்பட்டிருப்பதால் ஒன்றென்றும் இரண்டென்றும் சொல்லமுடியாத நிலைமையென்றே பொருள்கொள்ள வேண்டும். இந்த நிலையடைந்தோர்கள் பரமான்மாவில் ஐக்கியப்படுவதெப்படி யென்ற விஷயத்தையே வேதாந்தம் போதிக்கிறது. ஆதலால் இன்னின்ன சாதனங்கள் கைவந்தவர்கள்தான் முடிவான நிலைமையைக் கூறும் வேதாந்த நூலை வாசிக்கத் தொடங்கவேண்டுமென்று விதியிருக்கிறது.

ஒன்றிலொன்று கலந்தாலும் மறுபடி பிரியாத நிலையாயிருந்தாலன்றி பிறவியொழியாது. சர்க்கரை ஜலத்தில் கரைந்து கலந்து விடுகிறது. ஆயினும் இரண்டும் ஒரு இனமல்லவாதலின் மறுபடி பிரிக்கப்படலாம். கடல் ஜலத்தில் ஒரு குடஜலம் கலந்தால் பிரிக்க முடியாது. ஏனெனில் இரண்டும் ஒரு இனமேயாதலின். அவ்வாறே ஆன்மா பரமான்மாவோடு கலந்து நிற்கும் இரண்டற்ற நிலையும் பிரிக்கப்படாத நிலையேயாகும்.

முதலாவது, இரண்டல்லவென்பதால் இரண்டு பொருள்கள் வெவ்வேறுயில்லை என்பது திண்ணம்; தாயுமானவர் "என்னையும் தன்னையும் வேறு-உள்ளத், தெண்ணாத வண்ணம் மிரண்டற நிற்கச், சொன்னது மோவோரு சொல்லே-அந்தச், சொல்லால் விளைந்த சுகத்தையென் சொல்வேன்-சங்கர" என்று அருளினர்.

இரண்டாவது—அது பிரியாநிலையா யிருத்தல் வேண்டும்.

பெற்றாருலகிற் பிரியாப் பெருநெறி
பெற்றாருலகிற் பிறவாப் பெரும்பயன்
பெற்றா ரம்மன்றிற் பிரியாப் பெரும்பேறு
பெற்றா ருலகுடன் பேசாப்பெருமையே. (திருமந்திரம்)

அந்த நிலை யிவ்வா றிருப்பதற்கு, கூடும் இரண்டும் ஒரு இனமாயிருத்தல் வேண்டும். அப்படிக்கின்றேல் தாயுமானவர் "......என்னைத் தானாக்கிக் கொண்ட சமர்த்தைப்பார் தோழி" என்றும்...... "அதுவான லதுவாவ ரதுவே சொல்லும்" என்றும் கூறியருளியதும்,

மாணிக்கவாசக சுவாமிகள் "அவமாயதேவரெல்லா......
நாமொழிந்து சிவமான வாபாடித்தெள்ளேனங் கொட்டாமோ"
என்றருளியதும் பொருந்தாதனவாகும்.

ஆதலின் ஒரே இனமாயிருக்க வேண்டும் என்று நன்கு விளங்குகிறது. இரண்டும் ஓரினமென்பதை வெளியிடவே வேதம், அகம் பிரம்மாஸ்மி முதலிய வாக்கியங்களோடு தத்வமசி (நீ அதுவாய் இருக்கிறாய்) என்ற உபதேச மகாவாக்கியத்தையும் கூறியது—இரண்டும் சச்சிதானந்த இலட்சண முடையவைகளே யாதலின் நீ அதை யுணர்ந்து அதிற் கலந்து வேறாக விருக்கும் நான் என்ற நிலையை ஒழித்துவிடு என்று கூறியது.

வேதம் கடவுள் என்ற முன்னிலைப் பொருள் ஒன்றுண்டென்பதைச் சுட்டிக்காட்டி உன் பிறப்பிறப்பு ஒழியவேண்டின் அதோடு கலந்து அதில் மறைந்துபோ; அது உன்னைத் தன்னில் சேர்த்துக் கொண்டு தான்மாத்திரமாகவே விளங்கும் என்றுகூறுகிறதேயன்றி நீயே கடவுள் - என்று கூறவில்லை. அவ்வாறு ஆன்மா இரண்டறப் பிரியாவண்ணம் கலந்து விடினும், ஆன்மாவாகிய இது அப்போதும் கடவுளாக ஆய்விடாது. குடஜலம் கடல்ஜலத்தோடு கலந்துவிட்ட பிறகு அதுகடலில்மறைந்துபோகப் பிறகு இருப்பது பழையகடலேயன்றி குடஜலம் கடலாக மாறிவிட்டதல்ல. குடஜலத்திற்கு வந்த பலன் என்னவென்றால், குடஜலமா யிருந்தபோது இருந்த சிறு நிலைமை, அக்னியால் தகிக்கப்பட்டால் வெப்பமடைந்து கொதிப்பதாகிய துன்பம், அசுத்த பதார்த்தங்கள் கழுவப்படும்போது அவற்றோடு சம்பந்தபடும் வெறுப்பு முதலிய எல்லாக் கஷ்டங்களும் நீங்கி நிம்மதியடைந்து எப்போதும் குளிர்ச்சியா யிருப்பதேயாகும். பார்ப்போர் யாவரும் இதையும் சேர்த்தே கடல் என்று கௌரவப் பெயரிட்டுரைகின்றனர். இதைப்போல் ஆன்மாவும் அந்நிலையை யடைந்தபிறகு தாபத்திரியங்கள் ஒழிந்து பிறப்பிறப்பற்று ஒரு துயரம் ஒரு குறையுமின்றி பூரண திருப்தியாகிய முடிவிலாப் பேரானந்தத்தை யனுபவிக்கிறது. மேற்கண்ட குடஜலம் கஷ்டம் நீங்கிச் சுகமாய் மட்டு மிருக்கிறதே யன்றி கடலிற் கலந்திருந்தாலும், கடலைப்போல் எண்ணிறந்த ஜீவராசிகள் பிறந்து வளர்ந்து அழிய இடங் கொடுத்துக் கொண்டு ஆதாரமா யிருப்பதும், எண்ணிறந்த கப்பல்கள் ஓட வசதியளிப்பதுமாகிய காரியங்களைச் செய்யச் சக்தியுடையதாகாது. அவ்வாறே ஆன்மாவும் பரத்தில் கலந்தபின் மேற்கூறப்பட்ட நிலையான ஆனந்தத்தை மட்டும் அனுபவித்துக்கொண் டிருக்குமேயன்றி, கடவுள் செய்யும் சிருஷ்டித் திதி சங்காரம் முதலிய தொழில்களுக் குரிய தாகாது.

அந்தோ ! உண்மை யிவ்வா றிருக்க, கடவுளை யுபாசித்து அவரிடத்துப் பூரண அன்புடையராதல், உலகத்தின் துன்பங்களையும்

அநித்தியத் தன்மையையு முணர்ந்து அதில் வெறுப்படைதல் முதலிய ஒரு சாதனத்திற்கும் முயற்சி செய்யாமலே "அவர் கைவல்யம் பாடம்கேட்கிறார். கீதை பாடங்கேட்கிறார், வாசிஷ்டம் படிக்கிறார்." என்று பிறர்கூறும் கௌரவத்திற்காகவோ, அல்லது முதலில் என்னவாசிக்கத் தொடங்க வேண்டும் என்ற முறைதெரியாமலோ அனேகர் வேதாந்தம் படிக்க ஆரம்பித்து, இக்காலத்தில் இரகசியமாக வைக்கப்படாமல் நூல்களில் பகிரங்கமாய் அச்சிடப்பட்டிருக்கும் மகாவாக்கியங்களைப் பார்த்து விட்டதும் "ஓகோ! மோக்ஷம் மிக்க சுலபத்திலேயே யிருக்கிறது - நாமேபிரம்மம்- நாமேகடவுள்- இனி நாம் பூசிக்க வேண்டியதற்கு வேறே கடவுள் இல்லை. நாம் கோயிலுக்குப் போகவேண்டியதே யில்லை" என்று தீர்மானம் செய்துக்கொண்டு வாய்ப்பறை யறைகின்றார்கள். சிலர் இரணியனைப் போல் தன் காலுக்கே நமஸ்காரம் செய்து கொள்கிறார்கள்.

ஒவ்வொரு சீவனும் ஒவ்வொரு பிரம்ம மாய்விட்டால் கணக்கற்ற இப்பிரம்மங்களைக்கையெடுத்து கும்பிடக்கூட ஒருவருமிருக்க மாட்டார்களேயென்று விசனிக்கிறோம். இந்த அறிவிலார் கூற்றைக் கேட்கும் சிலர் வேதாந்தத்தைச் சரியாய் ஆராய்ச்சி செய்யாமலே, வேதாந்தத்தின் கொள்கைகளே இப்படி யிருக்கின்றன வென்று அதைக் குறைகூறுவதோடு, ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளாகிய ஜகத் குருவையும் தூஷித்து, முன்சொன்னபடி 'நானேகடவுள்' என்போர் கட்டிக்கொள்ளும் பெரிய பாபமூட்டையி னின்று சிந்தியதை இவர்களும் கொஞ்சம் மூட்டை கட்டிக் கொள்ளுகிறார்கள். நான் சீவன் என்கிற அகங்காரமே நமக்குப் பிறப்பிறப்பாகிய பெருந்தொல்லையை யுண்டாக்கிப் படாதபாடு படச்செய்கிறதென்றால், "நானே கடவுள்" என்கிற இந்த அகங்காரம் எவ்வளவு கேட்டை யுண்டாக்குமென்பதை யிவர்கள் உணர்கிறார்களில்லை.

முதலாவதாக பக்தியே வேண்டும் என்பதையும் அப்பக்தியில்லாவிடின் பயனின்றிக் கேடே விளையுமென்பதையும் நன்குணர்த்த வேண்டியே மேற்கண்ட விவரங்களை வரையநேர்ந்தது. பக்தியின்றேல் அருள் சித்திக்காது; அருள் சித்திக்காவிட்டால் மோக்ஷம் கிட்டாது. மனம் ஒடுங்கப் பக்தி யவசியம் வேண்டும். முன்னிலையாக ஒரு கடவுளைக் கருத்தில் வைத்தே பக்திசெய்யவேண்டும். அந்தமுன்னிலைப் பொருளினிடத்திருந்தே அருளைப்பெறவேண்டும். இதற்கே சிற்சத்திபதிதல் என்று கூறுவது. ஆங்கிலநூல் ஒன்றில் இதை Spirituality must flow from the Devoted to the Devotee என்று எழுதப்பட்டிருந்தது.

பக்திசெய்ய எதைக் கடவுளென்று முன்னிலையாக வைத்துப் பக்திசெய்வது? என்ற கேள்வியுண்டாகலாம்.

கடவுளோ "உருவமுமல்ல அருவமுமல்ல உருவாருவமுமல்ல இந்தமூன்றுமாகவுமிருக்கிறார். ஆகையால்அவரைஇன்னவிதமென்று ஒருவராலும கூறமுடியாது" என்று வேதங் கோஷிக்கிறது. ஆனால் அது அறிவு சொரூபமென்று கூறப்பட்டிருக்கிறது. அத்தகைய சொரூபத்தை முன்னிலையாய்ப் பாவிப்பது எல்லோராலும் ஆகக் கூடிய காரியமல்ல. அது தீவிரதர பக்குவிகளுக்கே கைகூடத்தக்கது. மனமோ நாமரூபமாகிய வஸ்துக்களையே நினைப்பதிலும், விரும்புவதி லும், நாடுவதிலும் பழகிப்போயிருக்கிறது. ஆகையால் ஆண்டவனை உபாசித்துப் பக்திசெய்வதில் அவரை அறிவுமயமாய்ப்பாவிக்க இயலா தோர் தங்களுக்குப் பிரியமான ஒரு உருவமாகவே (சிருட்டியாதி செய்யும் ஈசுரரூபங்களாகிய சிவன், விஷ்ணு, சுப்பிரமணியர் முதலிய வற்றில் தகுதியான ஒன்றை) முன்னிலையாகப் பாவனை செய்து கொள்ள வேண்டியிருக்கிறது. இதிலுள்ள வித்தியாசப்படி பக்தி உத்தம பக்தி, மத்திமபக்தி, அதமபக்தி என மூன்று விதங்களாய்ப் பிரிக்கப்பட் டிருக்கிறது. அவற்றில் கடவுளை அருவமாகவே அதா வது அறிவுசொரூபமாகவே உபாசிப்பது உத்தமபக்தி, உருவமென் றும் அருவலாத இலிங்கசொரூபத்தை யுபாசிப்பது மத்திமபக்தி. இரண்டையும் விட்டு தன் உடலைப்போன்ற உருவமாகிய விக்கிரகாதி உருவங்களைப் பாவிப்பது அதமபக்தியாகும்.

ஆண்டவனிடத்து நாம் வைக்கும் இப்பக்தி ஒன்பதுமார்க்கங்க ளால் வெளியிடப்படுகிறது என்றுகூறப்பட்டிருக்கிறது.(1)ஸ்ரவணம் (ஈசுரநாமத்தைக்கேட்டல்), (2) கீர்த்தனம் (அவன்கலியாணகுணங் களைப் புகழ்ந்துபாடுதல்), (3) ஸ்மரணம் (மனதிலேயேசிந்தித்தல்), (4)பாதஸேவனம் (உருவமாய்ப் பாவித்து அவன் திருப்பாதங்களைச் சேவித்தல்), (5) அர்ச்சனம் (அவனது திருநாமங்களைக் கூறி அர்ச் சனைசெய்தல், (6) வந்தனம் (ஸாஷ்டாங்க அஷ்டாங்க முதலிய நமஸ்காரங்களைச் செய்தல்), (7) தாஸ்யம் (அவனுக்குத்தாசனாகி சரியை கிரியையாதி தொண்டுகளைச் செய்தல்), (8) ஸக்யம் (அவன் மேல் அன்புவைத்து மனங்கனிவெய்தல்), (9) ஆத்மநிவேதனம் (உடல் பொருளாவி மூன்றையும் ஈஸ்வரனுக்கு அர்ப்பித்தல்), ஆகிய ஒன்பது வகைகளாம்.

இவற்றைச் செய்வதிலும் பாஹ்யபக்தி, அநந்யபக்தி, ஏகாந்த பக்தி என்ற மூன்று வகைகளுண்டு. இவற்றுள்,

(1) பாஹ்யபக்தி:—என்பது கடவுளைத் தனக்கு அன்னியமான வே றொரு உருவமாகப் பாவித்துப் பக்திசெய்தல் (இது மந்ததரம் மந்தம் ஆகிய அதிகாரிகளுக் குரியது) இதனால் பரோக்ஷ ஞானம் மட்டும் உண்டாகும்.

(2) அநந்யபக்தி: — கடவுள் வெளியில் அன்னிய உருவமாயில்லை, நமக்குள்ளேயே அறிவு சொரூபமா யிருக்கிறாரென்று உணர்

ந்து அவ்வாறே அவரை அருவமாய்ப் பாவித்துப் பக்திசெய்தல். (இது தீவிர அதிகாரிகளுக்குரியது) இதுதான் ஆன்மசொரூபத்தை யறிவதாகிய அபரோக்ஷ ஞானத்தையளிக்கும்.

(3) ஏகாந்தபக்தி:—என்பது கடவுள் நம்மைவிட்டு வேருக இல்லை. நம் ஆன்மாவிலே பாலில் நெய்போல் அன்புருவமாய்க் கலந்திருக்கிருர் என்றுணர்ந்து, தான் அன்புருவமாகித் தன்மைமுன்னிலை யிரண்டுமற்ற ஏகநிலையை யடையமுயலல் (இது அதிதீவர பக்குவிகளுக்குரியது) இதனுல் இரண்டற்ற அத்துவித நிலையாகிய நித்தியானந்தானுபவம் சித்திக்கும்.

மோக்ஷமடைய விரும்புவோர்கள் செய்யவேண்டிய முயற்சிகளும் அடையவேண்டிய சாதனங்களும் அனேக மானவைகளாகவும் கஷ்டமானவைகளாகவு மிருந்தாலும், ஒருவன் பூரணமான மெய்ப்பக்திமட்டும் உடையவனுயின், அவன் அப்பக்தி யொன்றினுலேயே எல்லாம் கைவந்தவனுகி முக்தியை யடைவான். ஏனெனில் பக்தியில் ஈஸ்வரன் அருள் சித்திக்கிறது. அவனருளால் ஆகாதது ஒன்றுமில்லையாதலின் சகல சாதனங்களும் அனுபவங்களும் ஏககாலத்தில் கைவந்து அவன் அன்புருவமாகி ஐக்கியமாகிய அம்முத்தி நிலையையடைகிருன். 6 தினங்களில் முத்தியடைந்த கண்ணப்பரும், 63 நாயன்மாருமே இதற்குப் போதுமான சான்ருகும். ஆகையால் மானிடஜன்மம் பெற்ற ஒவ்வொருவரும், ஈஸ்வரனிடம் பக்தி செலுத்த வேண்டியது அவசியம். அதற்காகப் பணம் காசுவேண்டுமென்ற கட்டாயமில்லை. பக்தியில்லாதவன் மிருகத்திலும் கடையாவான். மறுபடி யவன் இச்சென்மத்தை யடைதல் அரிதிலுமரிதாய் விடு மென்பதை ஒருவரும் மறக்கலாகாது. ஓம் தத்ஸத்.

பூர்வீக இந்தியாவில் ஔஷதம்.

[இது ம-ா-ா-ஸ்ரீ இராவ் ஸாஹேப் R. கிருஷ்ணராவ் போன்ஸ்லே (கவர்ன்மெண்ட் எக்ஸாமினேஷன் கமிஷனர் ஆபீஸ் மானேஜர்) அவர்களால் 1918 ஞ டிஸம்பர் மீ வெளியான "ஸௌத் இந்தியன் ரிஸர்ச்" என்ற சஞ்சிகையிலிருந்து மொழி பெயர்த் தெழுப்பட்டது.]

"இக்காலத்தில் புதிதாய்க் கண்டு பிடிக்கப்பட்டவை யென்று வெளிவரும் அனேக விஷயங்கள், இந்து ஆயுர் வேத பண்டிதர்களின் முன்னேர்களுக்கும், ஹக்கீம் களுக்கும் (யூனனி வைத்தியர்கள்) பல நூற்ருண்டுகளுக்கு முன்பே தெரிந்தவைகள் என்பதில் சந்தேகமே யில்லை." இது பொறுப்பாளி யல்லாத ஒரு சாதாரண மனிதனுடைய வாய்ப் பேச்சல்ல. ஆனல் இந்திய வைத்திய இலாகா டைரெக்டர் ஜனரல், கனம் ஸர்ஜன்

ஜனரல் ஸர். ஸி. பி. லூகிஸ், கெ. ஸி. யஸ். ஐ., யம். டி., யப். ஆர். ஸி. யஸ்., ஐ. யம். யஸ். (C. P. Lukis, K.C.S. I., M. D., F.R.C.S., I.M.S.) அவர்கள் கூறிய தாகும்.

"இரண வைத்தியத்தில் (Surgery) கூட இந்தியர்கள் விசேஷ பாண்டித்துவம் பெற்றிருந்ததாகத் தெரிகிறது. இந்த விஷயத்தில் ஐரோபிய இரண வைத்தியர்கள் (Surgeons) இன்னும் இக்காலத்தில்கூட அவர்களிடமிருந்து கொஞ்ச கொஞ்சம் தெரிந்து கொள்கிறார்கள்.

(Rhinoplasty) என்ற வியாதியைச் சத்திர மிட்டுச் சொஸ்தம் செய்வதை அவர்களிட மிருந்தே ஐரோபிய வைத்தியர்கள் அறிந்து கொண்டார்கள். கனிகளிலிருந்து (சுரங்கங்கள்) எடுக்கப் பட்ட வஸ்துக்கள், முக்கியமாய் நவரத்தினக் கற்கள், உலோகங்கள், இவற்றிலும், மூலிகைகள், ஜீவ ஜந்துக்களில் கிடைக்கும் பொருள்கள் முதலியவைகளிலும் உள்ள ஔஷத சக்தியைக் குறித்த சமாசாரங்களும், இரசாயன முறைப்படி இவற்றில் சேர்ந்துள்ளவைகளைப் பிரிக்கும் ஞானமும் ஆகிய இவைகள் உண்மையாகவே மிக்க மதிப்புள்ளவைக ளாகும். மூலிகைகளைப் பற்றிய சாத்திரம் மெய்யாகவே மிக்க அபிமானத்தோடு கையாளப்பட்டு வருவதாய்த் தெரிகிறது. பிரகிருதிக் கடுத்த சாத்திரத்தைப் பற்றிய ஆராய்ச்சி குன்றி யிருப்பதாகிய குறைக்கு இது ஒருவாறு நமக்கு ஈடு செய்கிறது. குதிரைகள், யானைகளின் வியாதிகள் முதலியவற்றைப் பற்றிக்கூட மிக்க விசேஷமான குறிப்புகளிருக்கின்றன.

மற்ற அம்சங்களில், வியாதிகள் தெய்வ குற்றத்தாலும், முன் செய்த வினையினாலும் உண்டாகின்றன வென்ற மிக்க புராதனமான கொள்கை அதிகமாய்ப் பரவி, வியாதிகளுக்குச் சிகிச்சை செய்வதற்குப் பதில் பிரார்த்தனைகள் செய்து கொள்வது, விரதம் பூண்பது, பிராம்மணர்களுக்குத் தானம் கொடுப்பது (நவக்கிரக சாந்தி செய்வது) முதலியவை அதிகமாய்ப் பழக்கத்தில் வந்து விட்ட படியால், கடந்த சில நூற்றாண்டுகளாக வைத்திய சாத்திரத்தின் நிலைமை மிகவும் குன்றி விட்டது.

வைத்தியர்கள் உபயோகிக்க வேண்டிய நிறுத்தலளவை முகத்தலளவைகள் மகததேசம் அல்லது கலிங்க தேசத்தில் வழங்கி வருபவைகளாயிருக்க வேண்டு மென்று தெளிவாய் விதிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. மற்றப் பூர்வீக இந்திய வைத்தியர்கள் ஔஷத விஷயமாக என்ன கூறியிருக்கிறார்களென்பதையு மறிவது இனிமையாயிருக்கும். நாற்பது வருடங்களுக்கு முன், அப்போது சென்னை வைத்திய கலாசாலையின் தலைவரா (பிரின்ஸிபால்) யிருந்து பிறகு ஸர்ஜன் ஜனரல் பதவி யடைந்த ஸர்ஜன் மேஜர் யம். ஸி. பர்னெல், யம். டி., யப். ஆர். ஸி. யஸ். (M. C. Furnell. M. D., F. R. C. S.) என்பவர் கலாசாலை சங்கத்தில் செய்த பிரசங்கத்தின் ஓர் அம்சத்தை யீண்டு வரைகிறோம்:—

"நாம் இந்தியாவின் பூர்வ சரித்திரத்தை நோக்குங்கால், வைத்திய சாத்திரம் இகழ்ச்சியாய்க் கருதப் பட்டது என்பதற்கு மாறாக அது மிக்க கௌரவமாய் மதிக்கப்பட்ட சாத்திரமாக விருந்த தென்று அறிகிறோம். குருபதவிக்கு இரண்டாவதாக வைத்தியர் பதவியே அதிக மரியாதையான

தாய் இருந்தது. இது மட்டுமல்ல, மிக்க பூர்வீக காலத்தில், குருபத விக்குச் சமானமாயிருந்த தாகத் தெரிகிறது. ஏனெனில் திருப்பாற் கடலைக் கடைந்த போது அதினின்றும் உற்பத்தியான பதினுன்கு அரிய வஸ்துக்களில் ஆயுர் வேத பண்டிதரும் ஒன்றென்று உங்கள் (இந்துக்கள்) புராதன நூல்களில் நான் கண்டிருக்கிறேன். ஜரா மரணத்தை நீக்கும் அமிர்தத்தைப் பெறுவதற்காக திருப்பாற் கடலைக் கடைந்த விஷயத்தைப் பற்றி மஹா பாரதத்தில் கூறப்பட்டிருக்கிறது. தேவர்களால் கடைய முடியாத போது நாக அரசனுகிய அனந்தன் மந்தா மலையாகிய மத்திற்கு வாசுகி என்ற நாகத்தைக் கயிருயமைத்த போது, திருப்பாற்கடல் கடையப்பட்டு கொந்தளிக்கும் அக் கடலினின்றும் சந்திரன், இலக்குமி, வெள்ளைக் குதிரை, கௌஸ்துபம் முதலியவை களும்,

கடையிற் கொந்தளி பாற்கடலில்
கடையும் மகிமை தனினின்றும்
அவாவு மமுதங் கரத் தேந்தி
அரிய தன்வந் தரியுதித் தார்.

(கடைசியில் தேவர்கள் கடையும் மகிமையினுல், கொந்தளிக்கும் அப் பாற் கடலினின்றும் ஆவலோடு எதிர் பார்த்த அமுதம் நிறைந்த வெண் கலசத்தைக் கரத்தி லேந்தி தன்வந்தரி தோன்றினுர்.) இவர்தான் பிரக்கியாதி பெற்ற ஆயுர் வேதியர்."

இத் தன்வந்தரி இந்துக்களின் பூர்வீக வைத்திய சாத்திரமாகிய ஆயுர்வேதத்தை நேராய்ப் பிரம்மாவினிட மிருந்து பெற்ருரென்று சிலராலும், இவர் தேவர் அரசனுகிய இந்திரனுல் ஆயுர் வேதம் போதிக்கப் பெற்று தேவருலகில் மிக்க ஜெயம் பெற்ற வைத்தியரா யிருந்தாரென்று சிலராலும் கூறப்படுகிறது.

ஆனுல் பூலோக வாசிகளாகிய மனிதர்கள் வைத்திய சாத்திரம் தெரியாமல் துன்பப் படுவதைக் கண்டு அவர்கள் வியாதிகளை நீக்கி, அவர்களுக்கு அச்சாத்திரத்தைக் கற்பித்து, அவர்கள் பிணிகளைத்தடுக்கவும் நீக்கவும் அறியும்படிச் செய்ய வெண்ணி இம்மண்ணுலகிற்கு அவர் வந்தார். இத்தன்வந்தரியார் பூமியில் ஹிந்துக்களுடைய மிக்க பரிசுத்தஸ்தலமாகிய காசிக்கு அரசனுனுர். இக்காசி க்ஷேத்திரம் ஹிந்து வாயினும், ஆங்கிலேயனுயினும், எவனும், கண்காட்சியாய்க் காண்பதற்காவது யாத்திரைபோவதற்குரிய ஒரு நகரமாகும். இங்கு தன்வந்தரி வைத்திய சிகிச்சைகளில் மிக்க பிரசித்தி பெற்றவரானுர். கடைசியில் தெய்வத்தன்மை பொருந்திய இருடிகளும் முனிவரும் அவரிடம் வந்து "ஓ மகாராசனே! இப்பூவுலக மாந்தர் தேகத்திற்கு நேரிடும் பல வித வியாதிகளாலும் அகஸ்மாத்தாய் நேரிடும் ஆபத்துகளாலும் மிக்க துன்புற்று மனே வேதனை யடைந்து ஆதரிப்பாரின்றி வருந்துகிருர்கள். அவர்கள் வியாதிகளை நீக்கவும் அவர்களுக்கு வியாதிவராது தடுக்கவும் அடியோங்களுக்குச் சக்தியளிக்கவேண்டுகிரேம். வியாதிகளின் சுபாவங்களையும், அவற்றை நிவர்த்தி செய்தற்கு வேண்டிய சிகிச்சா மார்க்கங்களையும், தேக சுகத்தைப் பேணிக் கொள்வதற்கும், மறுமையில் ஆன்மாவின் இன்பத்தை விர்த்தி செய்துக் கொள்வதற்கும் வேண்டிய மார்க்கங்களையும் விளக்கிக் காட்டி எங்களுக்கு ஒரு

நூல் செய்தருள வேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறோம். இவற்றைத் தங்களிடம் அடைய வேண்டித் தங்கள் சீடர்களாக இவண் வந்தோம்'' என்று பிரார்த்தித் தார்கள்.

தன் வந்தரியார் ''அவ்வாறே தங்கள் கோரிக்கையை நிறை வேற்றுகிறோம்'' என்றார். அதன் மேல் இராமர் காலத்தவராகிய விசுவாமித்திரருடைய புத்திரர் ஸுஸ்ரூதா என்ற இருடிக்கு வைத்திய சாத்திரம் கற்பிக்கப் பட்டது. தன்வந்தரி உபதேசப்படி ஸுஸ்ரூதாவால் திரட்டப் பட்ட நூல் ஆயுர் வேதத்தின் ஓர் சுருக்க மாகும்.

ஆனால் அந்த ஆயுர் வேத சாத்திரமோ சீர்கே டடைந் திருக்கும் இக்கால மனித வர்க்கத்தாற்கு மிக்க தெய்வீகம் பொருந்திய தாகவும் பிரம்மாண்ட நூலாகவும் இருக்கிறது. எனக்குத் தெரிந்த வரையில் ஸுஸ்ரூதாவின் நூல் இன்னும் இருப்பதாகவும் ஹிந்துக்களுக்குள் பெரிய ஆதார நூலாக விருக்கிற தாகவும் தெரிகிறது. இதைப்பற்றி விவரமாகக் கூறி உங்கள் காலத்தைப் போக்க நான் விரும்ப வில்லை. ஆனால், அதன் மூன்றும்பாகம் உள்ளங்கங்களைப்பற்றிய சாத்திரமாகவும் (Anatomy) தேக அமைப்பைப் பற்றி விவரிக்கும் சாத்திரமாகவும் இருக்கிறது என்ற அதிசய சங்கதியைப் பற்றி மட்டும் உங்களுக்கு நினைப்பூட்டு கிறேன். அந்த நூலைப் பார்த்ததிலிருந்து அங்கச் சேதம் செய்வதை நீங்கள் இக்காலத்தில் வெறுக்கும் வழக்கமானது, அரசர்களும் இருடிகளும் வைத்தியர்களாக விருந்த அந்தப் புராதன நல்ல காலத்தில் இருந்திருக்க வில்லை யென்று அறியலானேன். ''ஒரு சீடன் வைத்தியத்தில் பண்டிதன் என்று யாவராலும் மதிக்கப்படுவதற்கு எத்தகைய வேலைகளில் அவன் பயிற்சி யடைய வேண்டுமோ, அவை யாவும் ஆயுர் வேத போதகர் அந்த சீடனுக்குக் கற்பிக்க வேண்டும்'' என்று ஸுஸ்ரூதா விதித்திருக்கிறார். அதோடு சத்திரமிடுவதற்கு வேண்டிய கருவிகளை யுபயோகிக்கும் மார்க்கங்களை யெல்லாம் போதிக்கிறார். அவர் இன்னும், ''மனித தேகத்தின் சுபாவத்தை நன்குணராமல் சோதனை செய்து தெரிந்து கொள்வதற்காக வைத்தியம் செய்வோர்கள் மனிதர்களைக் கொலை செய்வோர்க ளாவார்கள்.'' என்று கூறியிருக்கிறார். ஸுஸ்ரூதாவிற்கும் முற்பட்டவ ரென்று சிலரால் கருதப்படுவோ ராகிய சாரகர் என்பவர் ''ஒரு வைத்தியன் தேகத்தின் உள்ளும் வெளியிலுமுள்ள எல்லாப் பாகங்களையும், அவை யொன்றுக் கொன்று எவ்விதம் பொருத்தமாய் அமைக்கப்பட் டிருக்கின்றன வென்பதையும் நன்றாய் அறிந்திருக்க வேண்டும்'' என்றும், ''அவ்வாறு அறியாதவன் வைத்தியம் செய்யத் தகுதியுடையவனல்ல'' என்றும் கூறுகிறார். உங்களுடைய பெரியோரான மநு என்பவர் தம் நீதிநூலில் என்ன கூறுகிறார். ''ஒரு பிராம்மணன் மனிதனுடைய பச்சை எலும்பைத் தீண்டினால் ஸ்நானம் செய்வதால் சுத்தி யடைகிறான். அது உலர்ந்த எலும்பாயின் வாயைச் சலத்தால் சுத்தி செய்து கொண்டு பசுவைத் தடவுதலாலும், சூரியனைக் காண்பதினாலும் சுத்தி யடைகிறான்'' என்று கூறியிருக்கிறார். இதனால் மநுவானவர் இத்தகைய விஷயங்களை நிஷேதித்துக் கூறவில்லை யென்று நன்கு விளங்குகிறது. பெண்டிக் பிரபு இராஜப் பிரதிநிதியா யிருந்த காலத்தில் வங்காளத்திலிருந்த கல்வியாளர்களாகிய பண்டிதர்கள் இவ்விஷயத்தைப் பற்றி தங்கள் அபிப்பிராயத்தை

யளித்திருக்கிறபடி, வைத்திய சாத்திரத்தைக் கற்கும் பிராம்மணன் அங்கச் சேதம் செய்யலாகும் என்று சாத்திரங்களில் விதிக்கப்பட் டிருக்கிறது என்று நான் அறிகிறேன். உயர்ந்த ஜாதியைச் சேர்ந்த இந்துக்கள் மேல் நாட்டு வைத்திய சாத்திரத்தைக் கற்பதற்கு இது ஒரு கடக்க முடியாத தடையாயிருக்கிற தென்பதே எப்போதும் என் சொந்த அபிப்பிராயமாயிருந்தது. ஆகவே வைத்திய சாத்திரத்தை வாசிக்க விரும்பும் பிராம்மணர்கள் உள் அங்கங்களைச் சோதித்து அவற்றின் அமைப்பு வித்தியாசம் முதலியவற்றை யறியக் கற்காவிட்டால் அவர்களை மன்னித்துவிடவேண்டுமென்று, சில நாட்களுக்கு முன் நான் துரைத்தனத்தார்க்கு ஒரு மனு வெழுதத் தொடங்கினேன். பார்க்கப் போனால் உங்களுடைய பரிசுத்தம் பொருந்திய வேதங்களில் அத்தகைய தடைகள் ஒன்று மில்லையென்றே தெரிகிறது. இதுவும் இன்னும் அனேக இதர தவறான கொள்கைகளும் சீர்கே டடைந்த இந்தப் பிற்காலங்களில் ஏற்பட்டவைகளே யாகும்.

எங்களுடைய ஜன்மதேசமாகிய இங்கிலாந்தில், அங்கச்சேதம் செய்து உள் அவயவங்களைப் பரிசோதிப்பதாகிய சாத்திரத்தைக் கற்பது சட்டத்திற்கு விரோதமானது என்கிற கொள்கையை நிகழும் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில்தான் ஒழித்து விட்டு, அது சட்ட விரோதமானதல்லவென்று தீர்மானித்தோம். இப்படிச் செய்துவிட்டதைப் பற்றி நாங்கள் பெருமை பாராட்டிக் கொள்ளுகிறோம். நாங்கள் இவ்வாறு பெருமை பாராட்டிக் கொள்ளும் இத்தகைய விஷயத்தை இத்தேச வாசிகள் சுமார் முன்னூறு நானூறு வருடங்களுக்கு முன்பே செய்துவிட் டிருக்கிறார்களென்பதும், மேல் நாட்டிலுள்ள ஆரிய குலத்தாரின் தாழ்மையான பிரதிநிதியாகிய நான் இங்கு உங்கள் முன்னே நின்று, உங்கள் பூர்வீகக் கொள்கைகளை மறுபடி அனுசரித்து நடவுங்கள் என்று உங்களுக்குப் போதிப்பதும் நினைக்க எவ்வளவு அதிசயமானவைகளா யிருக்கின்றன பாருங்கள். நான் அப்படிக் கூறுவது ஒரு தீர்க்கதரிசி "முன் இருந்ததுதான் இப்போதிருக்கும்; இப்போது நடப்பதுதான் இனிமேலும் நடக்கும்; உலகில் புதியவஸ்து ஒன்றுமே யில்லை" என்று கூறியதுபோ லிருக்கிறது.

இந்நாட்டில் வைத்திய சாத்திரம் பூர்வீக மானதும், கௌரவமாய் மதிக்கப் பட்டதும் என்பதற்கு இந்துக்களுடைய புராணங்களிலுள்ள கட்டுக் கதைகளை மட்டுமே நாம் ஆதாரமாய் நம்ப வேண்டுமென்ற கட்டாய மில்லை. மகா அலக்ஸாண்டர் அரசரோடு கிரேக்கர்கள் இந்தியாவிற்கு வந்த போது, அவர்களுக்கு மிக்க அதிசயத்தையும் மெச்சுதலையும் உண்டாக்கின இந் நாட்டின் நாகரீகக் குறிகளில் வைத்திய சாத்திரம் வெகு தூரம் முன்னேற்ற மடைந்திருக்கிற தென்பதையும் கண்டார்கள்.

ஆரியன் என்ற சரித்திரக்காரர் பின் வருமாறு தெரிவிக்கிறார்:—

"கிரேக்கர்கள் இந்தியாவிற்கு வந்திருந்த போது பாம்புக் கடிக்குத் தக்க சிகிச்சை யவர்களுக்குக் கிடைக்கவில்லை. ஆனால் இந்தியர்கள் பாம்பு கடித்தவர்களைச் சுகப்படுத்தி விட்டார்கள்."

மறுபடி நியர்சஸ் என்பவர் "அலக்ஸாண்டர் மிக்க சாமார்த்தியமான இந்திய ஆயுர் வேதியர்களைத் தன்னிடம் சேர்த்து வைத்துக் கொண்டு

யாராருக்குப் பாம்பு கடிக்கிறதோ அவர்களெல்லாம் அரசருடைய கூடாரத்திற்கு வந்து சொஸ்த மடைந்து செல்லலாமென்று பாளைய முழுதும் பகிரங்கப் படுத்தி வைத்தார்'' என்று கூறுகிறார். இது கிருஸ்து பிறக்க 300 வருடங்களுக்கு முன் நடந்த விஷயம். அப்படி யிருக்க, இப்போது 1878-ம் வருடம்—மேற்படி சங்கதி நடந்து 2000 இரண்டாயிர வருடங்கட் கதிகமான பின்—இந்திய துரைத்தனத்தாரும் டாக்டர் ஷார்ட்டும் பாம்பு கடிக்குத் தக்க ஔடதம் கூறுவோர்க்கு பரிசளிக்கிறோம் என்று மறந்து போன அந்த அருமையான சிகிச்சையை அறிய முயல்வதைக் காண்கிறோம். அக்காலத்திய வைத்தியர்கள் வேறு வியாதிகளையும் சுகப் படுத்தின தாய்க் கூறப்பட் டிருக்கிறது.

நியர்சஸ், "எங்களுக்குள் யாராவது மிக்க அசௌக்கிய மடைந்த தாக உணர்ந்தால், அவர்கள் பிராம்மணர்களுக்குச் சங்கதி தெரிவிக்க, அவர்கள் மிக்க ஆச்சரியமான விதமாய், இன்னும் மனிதனுடைய சக்தியால் ஆகக் கூடாத மார்க்கங்களைக் கொண்டு, எத்தகைய வியாதிகளையும் சொஸ்தம் செய்து விடுகிறார்கள்'' என்று கூறுகிறார். கிரேக்கர்கள் அலக்ஸாண்டரும், அவருக்குப் பின் வந்த அரசர்களும் படை யெடுத்துவந்து இந்தியாவில் பிரவேசித்த காலங்களில் அனேக விஷயங்களை நேராய் அறிந்து கொண்டது மட்டுமே யன்றி, பிற்காலத்தில், இந்தியரிட மிருந்து கற்றுக் கொண்ட இஜிப்ட் தேசத்தாரிட மிருந்தும் அனேக விஷயங்களைக் கற்றுக் கொண்டார்கள். ஆனால் நாம் இந்தியாவிற்குக் கடமைப்பட் டிருப்பது இன்னும் பிற்காலத்தி லென்று நேராக அறியலாம். அலக்ஸாண்ட்ரியா நகரம் அழிந்த பின், காலிப்கள் அரசாட்சியில் பாக்தாத் நகரம் கல்விக்குப் பிரதான நகரமாகிய போது, மிக்க சுறுசுறுப்போடும் ஜெயத்தோடும் வைத்திய சாத்திரம் விர்த்தி செய்யப் பட்டது. இந்து வைத்தியர்கள் அரேபியாவில் வந்து நிலையாயிருக்கும்படி அழைக்கப்பட்டார்கள். சாரகர், ஸுஸ்ருதர் இவர்களுடைய நூல்களையும், நிதானம் என்ற ஓர் சாத்திரத்தையும் கிருஸ்து பிறந்த 773-ம் ஹூ ஹாரன், மான்ஸூர் என்பவர்கள் காலங்களில் அராப்பியர்கள் மொழி பெயர்த்து கற்றுக்கொண்டார்கள். மத்திய தரைக் கடலின் ஓரத்திலுள்ள பூமிகளை மகம்மதியர்கள் ஜெயித்த போது வைத்திய சாத்திரமும் கணித சாத்திரமும் அராபியர்களால் ஸ்பெயின் தேசத்திற்குக் கொண்டுவரப்பட்டு அங்கிருந்த கல்லூரிகளில் கற்பிக்கப் பட்டு அபிவிர்த்தி யடைந்தன. அராபியர்கள் பிரக்யாதி பெற்ற வைத்தியர்களாயிருந்ததோடு இரசாயன சாத்திரத்திலும் மிக்க தேர்ச்சி யடைந்தவர்களா யிருந்தார்கள். இந்த இரண்டு சாத்திரங்களும் இப்போதிருக்கும் நிலைமையை யடைந்ததற்கு அவர்கள் போதனைகளே அஸ்திவார மாயிருந்தன. ஆயினும் அவர்கள் அங்கங்களைப் பற்றிய சாத்திரத்தை அலட்சியம்செய்து விட்டதாகவும், அனேககீழ்த்தேச சிகிச்சைகளை வழக்கத்தில் கொண்டு வந்ததில் முக்கியமாய் பிரக்யாதி பெற்றவர்களென்றும் தெரிய வருகிறது. ஆசியா கண்டத்தில் மட்டுமே உற்பத்தியாகும் ரேவல் சீனி, கற்பூரம், புளியமராம், நிலா விரை முதலியவைகளும் இன்னும் அனேகபிசின்களும், அராப்பியர் வைத்தியக் கல்வி கிழக்கு தேசத்திலிருந்தே வந்த தென்று ருசுப் படுத்துகின்றன.

குறிப்பு :—நம் தாய்நாட்டின் பூர்வீக உயர்ந்த நிலைமையைத் தெரிவிக்கும் இத்தகைய அரிய விஷயத்தை மற்றத் தமிழ்ப் பத்திரிகைகளும் பிரசுரித்து யாவரும் அறியும்படி செய்தல் மிக்க நன்மை பயக்கும் பேருபகாரமா யிருக்கும். பத்திரிகாசிரியர்.

கைவல்ய நவநீத வசனம்

(260-வது பக்கத் தொடர்ச்சி)

ஜீவஸத்தாவத்தைகளுக்குத் திருட்டாந்தம் கூறல்

இவ்வாறு ஜீவனுக்கு எழவஸ்தைக ளுண்டு என்பது உன்மனதிற்கு நன்ருய் விளங்கும் பொருட்டுத் திருட்டாந்தமாக ஒரு அதிசயமான கதை கூறுகின்ருேம். அதைக் கவனமாய்க் கேட்பாயாக.

ஒரு சமயம் பத்து புருடர்கள் வெள்ளம் ஓடிக்கொண் டிருக்கும் ஒரு ஆற்றைக் கடந்து செல்ல நேரிட்டது. அவர்கள் பதின்மரும் அவ்வாறே ஆற்றைக் கடந்து கரையேறினர்கள். உடனே அவர்களில் ஒருவன் ஒருவரும் வெள்ளத்தில் சிக்கி மடியாமல் யாவரும் க்ஷேமமாய் இக்கரை வந்து சேர்ந்தோமா என்பதை யறிய வெண்ணி, ஒன்று, இரண்டு, மூன்று என்று தன்னெதிரிலிருந்த ஒம்பது பேரையும் எண்ணி "அட இதென்ன ஒருவனைக்காணேமே" என்று திடுக்கிட்டேங்கி சே சரியாக எண்ணிப்பார்ப்போமென்று மறுபடி யெண்ணினன். அப்போதும் தான் பத்தாவது மனிதன் என்பது நினைவிற்கு வாராததால், எதிரிலிருந்த மற்ற ஒன்பதின்மரை மட்டுமே யெண்ணி விட்டு "அய்யோ! ஒருவன் ஆற்று வெள்ளத்தில் மடிந்து போனனே" என்று தேம்பித் தேம்பி அழவாரம்பித்தான்.

அச்சமயம் வழிப்போகிகன் ஒருவன் இவன் அழுவதைக் கண்டு சங்கதியை விசாரித் தறிந்து கொண்டு "அய்யோ பத்தாவது மனிதன் மடிந்து போக வில்லை. உயிரோடிருக்கிறன்" என்ருன். இதைக் கேட்டதே அம்மனிதன் இது உண்மையாய்த்தா னிருக்குமென் றெண்ணிப் பயம் நீங்கி மிக்க ஆவலோடு "எதோ, அவன் எங்கே யிருக்கிறன்?" என்று கேட்டான். பிரயாணி "இதோ. ஒன்பது பேரை எண்ணின நீதான் பத்தாவது மனிதன்" என்ருன். அவன் தானே பத்தாவதென்று பிரத்தியட்சமா யறிந்ததே, அப்பா! என்று சோகமும் துயரும் நீங்கி வியப்பாலும் சந்தோஷத்தாலும் மௌனமாய் நின்ருன்.

இத்திருட்டாந்தத்தில்,

(1) அம்மனிதன் ஒன்பது பேரை யெண்ணியவன் தான் பாத்தாவது மனிதன் என்பதை மறந்ததே அஞ்ஞானம்.

(2) ஒன்பது பேரேயிருப்பதால் மற்ற ஒரு ஆள் இல்லையென்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டதே ஆவரணம்.

(3) அய்யோ (பத்தாமவனுகிய) ஒருவன் ஆற்றில் மடிந்தானே என்று துக்கித்தல் விக்ஷேபம்.

(4) அச்சமயம் வழிப்போக்கன் ஒருவன் அவனைக் கண்டு "பத்தாமவன் மரிக்கவில்லை. இருக்கிறான்" என்பதைக் கேட்டு இது நிச்சயமாகவே யிருக்குமெண்றெண்ணியது பரோக்ஷ ஞானம்.

(5) வழிப் போக்கன் கூறியபின் தான்தான் பத்தாமவனென்று தன்னைப் பிரத்தியக்ஷமாய்க் கண்டதே அபரோக்ஷ ஞானம்.

(6) பத்தாமவன் மடிந்தானென்ற பீதியாலுண்டாயிருந்த துக்கம் நீங்கியதே துக்க நிவர்த்தி.

(7) தானே பத்தாமவனென்று கண்டபின் எல்லாச் சந்தேக விபரீதங்களும் நீங்கித் துக்கமொழிந்ததால் உண்டான பூரணமனோ நிம்மதியாகிய சந்தோஷமே தடையற்ற ஆனந்தம்.

[பத்தாமவன் தானென்று ஐயமற அறிந்ததே, இதுகாறும் உண்டான அனர்த்தங்களியாவும் தன் மூடத்தனமாகிய மறதியினால் உண்டானவையென்ற உணர்ச்சி யுண்டாகி, இது காறும் நடந்தவை நேரிடாது போலும் தோன்ற, புதையலை மறந்துவிட்டு அலைந்து திரிந்து துக்கப்படும் ஒருவன் திடீலென்று புதைத்து வைத்த இடம் நினைவிற்கு வந்து அங்கு ஆவலோடு ஓடிப் புதையல் பழுதின்றி யிருக்கக் கண்டால் எத்தகைய ஆனந்தமடைவானோ, அத்தகைய ஆனந்தத்தையே (பத்தாமவனாகிய) இவனும் அடைவான். இத் திருட்டாந்தத்தில் இவன் ஆனந்தத்திற்குக் காரணம் இவனுக்குப் புதிதாய் ஒரு பொருள் கிடைத்ததல்ல. இவன்வைத்து மறந்ததை மறுபடி யடைந்ததே காரணமாகும்.

இவ்வாறே ஞானத்தை யடைந்தோனும், புதிதாக வொன்றையும் பெறுவதில்லை. வேறெங்கோ கட்டிவைத்திருக்கும் ஒரு புதியவிடத்திற்குச் செல்வதுமில்லை. அதாவது ஆன்மாவின் நிலைமையில் உண்டாகும்பேதமே மோக்ஷ நிலையன்றி புதிதாய் அடையப்படுவது ஒன்றுமில்லை. அஞ்ஞானவிருள் நீங்கியதே அவனும் "அடடா! நமது பிராந்தியா லல்லவோ இந்த மாயா மயக்கமாகிய அநித்திய உலகத் தொல்லைகளை மெய்யென்று நம்பி படாத பாடு பட்டுக்கொண் டிருந்தோம். ஆகா! இது மிகவும் ஆச்சரியம். இன்னும் அனேகர் நாம் இது காறும் இருந்தது போல் அம் மயக்கத்தில் சிக்கிக் கொண்டே அக்கனவை மெய்யெனக் கருதி மிக்க அக்கறை யோடு உழன்றுகொண் டிருக்கிறார்களே! இது பெரிய வேடிக்கையே" என்று நினைத்து நினைத்து நகையா நிற்பன். எதைப் போலவெனின், ஒருவன் கனவில் பயங்கர விஷயங்களைக்கண்டு அச்சமயம் கனவு மெய்யாகத் தோன்றுவதால் மிக்க பீதியும் நடுக்கமுமடைந்து அலறிக் கூவி விழித்துக் கொண்டதே "சே! என்ன முட்டாள் தனம்! கனவை நிச்சயமென்று நினைந்து அப்படிப் பயந்து போனோமே யென்று நினைத்து நினைத்து நகைப்பானோ, அதைப்போலவே யாகும். அவன் எப்படி அக்கனவைப் பொய்க் காட்சி யென்று அது நினைவிற்கு வரினும் அதை மறந்து விடுவானோ, அவ்வாறே ஞானியும் உலகைப் பொய்த் தோற்றமென்று அதைப்பற்றி சிந்தியா தொழிவன். இங்கு ஒரு சந்தேகம் உண்டாகலாம். அதாவது விழித்துக் கொண்டு கண்டது கனவு ஆதலின் பொய்த் தோற்றம் என்று உணர்ந்தபின் கனவில் கண்ட காட்சி

கள் புலப்படுவதில்லை. உலகமோ கனவைப் போல் பொய்த் தோற்றம் என்று திடமாயறிந்த பின்னும் கட்புலனுக்குத் தோன்றிக் கொண்டே யிருக்கிறதே என்ற கேள்வி யுண்டாகலாம். கானலை நீரென்று மயங்கிய ஒருவன் அது பொய்த் தோற்ற மென்று பிரத்தி யட்சமாய்க் கண்ட பின்னும் அக்கானல் நீர் தோன்றிக் கொண்டேதா னிருக்கிறது. ஆயினும் அவன் மட்டும் மறுபடி அது மெய்யான நீரென்று மயங்க மாட்டான். அவ்வாறே உலகம் கனவு போல் பொய்த் தோற்ற மென்றுணர்ந்த பின்னும் தோன்றிக் கொண்டே யிருந்தாலும் ஞான மடைந்தவன் அதை மறுபடி சத்தியமான தென்று நம்பி ஏமார மாட்டான். ஞான மடைந்தவன் தன் வரையில் மாயையை நீக்கிக் கொண்ட போதிலும், மாயையின் காரியம் இருந்து கொண்டே யிருக்குமாதலின் உலகம் தோன்றிக் கொண்டே தானிருக்கும்.]

இவ்வாறு கூறப்பட்ட திருட்டாந்தத்திற்குத் தசபுமான் திருட்டாந்த மென்று பெயர். இதைக் கேட்ட சீடன் குருவை நோக்கி,

"என் அஞ்ஞானத்தை யொழிக்க வல்ல ஆசாரியரே! பத்தாவது மனிதனை அவன் தன்னையே தான் பத்தாமவ னென்று பிரத்தி யக்ஷமாய்க் கண்டது போல எனது நிஜ வடிவை யான் காணும்படித் திருவருள் புரிய வேண்டும்" என்று பிரார்த்தித்தான்.

(ஆசான் மகாவாக்கியப்படி அவனது ஆன்ம சொரூபத்தை யவன் அறியும்படி காட்டத்தொடங்குகிறார்.)

மகா வாக்கிய விசாரம்.

[நான்கு வேதங்களிலும் நான்கு இறுதி வாக்கியங்களுள்ளன - இவற்றிற்கே மகாவாக்கியங்கள் என்று பெயர்.

அவை, (1) பிரக்யானம் பிரம்மம், (2) அகம் பிரம்மாஸ்மி, (3) அயம் ஆத்மா பிரமம், (4) தத்வமசி என்ற நான்கு வாக்கியங்களே யாகும். இவற்றில் சாமவேதத்திலுள்ள சாந்தோக்கிய உபநிஷத் மஹாவாக்கியமே தத்துவமசி என்ற வாக்கியமாகும். இதுவே உபதேச வாக்கியம். ஈண்டு மகாவாக்கியமென்றது இதையே குறிக்கிறது.]

குரு:—சீடனே! சாம வேதத்தின் சாந்தோக்கிய உபநிடத்தில் "தத்துவமசி" என்று அரிய மகா வாக்கிய மொன்றுளது. அது தத் + துவம் + அசி என்ற மூன்று பதங்களா லாயதோர் வாக்கியம்.

தத் என்பதற்கு அது (ஈஸ்வரன்) என்று பொருள்; துவம் என்பதற்கு நீ (சீவன்) என்றுபொருள். இவற்றிற்கு வாச்சியார்த்தம் என்றுபெயர். அப்பதங் கட்கு முறையே பிரம்மம், கூடஸ்தன் என்பன இலட்சியார்த்தங்களாகும். பரிசுத்தமான இந்த இலட்சியார்த்தப் பொருள்களாகிய கூடஸ்தப் பிரம்மங்கட்கு அசி (ஆகின்றாய்) என்ற பதம் ஐக்கியத்தைப் போதிக்கிறது. அதன் உண்மையை யுனக்கு விளங்கும்படி கூறுகிறோம் கேட்பாயாக.

[ஒரு வார்த்தையின் பொருள் விளங்குவதில் இரண்டு வழிகளிருக்கின்றன. வார்த்தையின் சத்தத்தால் மட்டுமே அர்த்தம் விளங்குவது ஒரு

மார்க்கம். அவ்வாறு விளங்கும் அர்த்தத்திற்கே வாச்சி யார்த்தம் என்று பெயர். அவ்வாறின்றி வார்த்தையின் இலட்சணையால் அறியப்படும் அர்த்தத்திற்கு இலட்சி யார்த்தம் என்று பெயர். இலக்ஷணை அல்லது இலக்கணை என்பது ஒரு வார்த்தைக்கு அதன் சத்த மாத்திரத்தால் ஏற்படும் பொருளை விட்டுவிட்டு, அப் பொருளின் சம்பந்தத்தை யுடைய வேறு பொருளை அதற்கு அர்த்தமாகக் கொள்வது. இந்த இலக்கணை மூன்று வகைப்படும் இவற்றின் விவரம் பின்னால் கூறப் படுகிறது. ஆண்டுக் கண்டு கொள்க.]

[சீவ, ஈஸ்வர, கூடஸ்த, பிரம்மங்கள்.]

உலகில் எங்கும் நிறைந்துள்ள ஒரு ஆகாசமே எப்படி உபாதி பேதத்தால் மஹா காசம் என்றும், மேகா காசம் என்றும், கடா காசம் என்றும், ஜலா காச மென்றும், நான்கு விதங்களாய்க் கூறப் படுகின்றதோ, அப்படியே ஏகமயமாய் எங்கணும் இடையற நிறைந்து நிற்கும் பரப் பிரம்மம் ஒன்றே பிரம்மம், ஈசுரன், கூடஸ்தன், சீவன் என நான்கு சைதன்னியங்களாகத் தோன்றும்.

திருட்டாந்தத்தில் :—

1. மஹா காசம் என்பது பிரம்மாண்டத்தின் உட்புறமெங்கும் ஏகரசமாய் நிறைந்து நிற்கும் ஆகாச மாகும்.
2. மேகா காசம் என்பது மேகத்திற்கு இடங் கொடுத்திருப்பதும் மேக ஜலத்தில் பிரதி பலித்திருப்பது மாகிய ஆகாச மாகும்.
3. கடா காசம்-ஜலம் நிறைந்த ஒரு கடத்திற்கு எவ்வளவு ஆகாசம் இடங் கொடுத் திருக்கின்றதோ அவ்வளவு ஆகாசத்திற்கே கடாகாச மென்று பெயர்.
4. ஜலா காசம்-கட ஜலத்தில் பிரதிபிம்பித் திருக்கும் ஆகாசமும், கடா காசமும் சேர்ந்து ஜலா காச மெனப்படும் (வேறிடங்களி லுள்ள ஜலத்தில் பிரதி பலிக்கும் ஆகாசத்திற்கும் இவ்வாறே யுணர்க).

தாஷ்டாந்தத்தில்.—

1. பிரம்மம்—பிரம்மாண்டத்தி னுள்ளும் புறம்பும் வியாபித்திருக்கும் மகா காசம் போல், எங்கணும் வியாபித் திருக்கும் சைதன்னியமே பிரம்மம். அதாவது சர்வ வியாபகமா யிருப்பது.
2. ஈசுவரன் —சுத்த மாயையில் பிரதி பலித்த அப்பிரம்மச் சாயையே அதாவது மாயையில் பிரதி பலித்த பிரம்மமும் மாயைக்கு அதிஷ்டான மாகிய பிரம்மமும் சேர்ந்தது. மேகத்திற்கு இடங் கொடுத்திருந்த ஆகாயத்தையும் மேக ஜலத்தில் பிரதி பலித்திருக்கும் ஆகாயத்தையும் சேர்த்து மேகா காசம் என்பது போல் ஈஸ்வரன்.

[இதுவே சிருட்டியாதி பஞ்ச கிருத்தியங்களைச் செய்யும் ஈசுவரன். இதுவும் வியாபக மெனினும் பிரம்மத்தை நோக்க அவ்வளவு வியாபக முடையதல்ல. அதாவது பிரம்மம் எங்கும் வியாபகமா யிருப்பது போல் ஈசுவரனிலும் வியாபகமாகவே யிருக்கிறது. ஈசுவரனோ பிரம்மத்தில் வியாபகமா யில்லை. அதினும் குறைந்த வியாபகமே ஈசுவரனுக்குடையது.]

3. கூடஸ்தன்—கூடஸ்தன் எனினும் சீவ சாட்சி எனினும் ஒன்றே. அந்தக் கரணம் சொச்ச பதார்த்த மானபடியால், அதிலும் பிரம்மச்

சாயை அதாவது பிரம்மத்தின் பிரதிபலிதம் உண்டு. அந்தக் கரணம் ஒன்றே சீவனையும் சீவ சாக்ஷியையும் தோன்றச் செய்வது. அதுவே இவற்றை அகண்டப் பிரம்மத்தினின்று வேறு பிரித்துக் காட்டுவது. அப்படி வேறு பிரித்துக் காட்டுவதிலும் வித்தியாச முண்டு. எவ்வாறெனின் அந்தக் கரணம் கூடஸ்தனுடைய சொரூபத்தில் பிரவேசிக்காமலே கூடஸ்தனைச் சேதனத்தி னின்றும் (பிரம்மத்தி னின்றும்) வேறு பிரித்துக் காட்டுகிறது. இதுவே கடத்திற்குள் ளிருக்கும் ஆகாயம் போன்றது. கடம் அந்த ஆகாயத்தின் சொரூபத்தில் பிரவேசிக்காமலே எங்கும் வியாபித்துள்ள ஆகாயத்தினின்றும் அதைப் பிரித்துக் காட்டுகிறது. அவ்வாறு சேதனத்தினின்று அந்தக்கரணத்தால் பிரிக்கப் பட்டது சீவசாக்ஷி. அவ்வாறு ஒன்றன் சொரூபத்தில் பிரவேசியாமல் வேறு பிரித்துக் காட்டப் பட்டதற்கு உபகிதம் என்று பெயர். ஆகவே அந்தக்கரண உபகித சேதனம் சாக்ஷி அல்லது கூடஸ்தன் என்று கூறப்படும். (இதில் அந்தக் கரணத்திற்கு உபாதி என்றும், உபாதியால் பிரிக்கப்பட்டதற்கு உபகிதம் என்றும் பெயர்.)

4. சீவன்—முன் கூறியபடி அந்தக் கரணம் அதன்சொரூபத்தில் பிரவேசித்துச் சீவனைச் சேதனத்தினின்றும் வேறாகப் பிரித்துக் காட்டுகிறது. எதைப்போலென்னில், நீலக் கடிதம் என்பதைப் போல். நீலத்தன்மை கடிதத்தின் சொரூபத்தில் பிரவேசித்து, வெள்ளைக் கடிதம், கறுப்புக் கடிதம், சிகப்புக் கடிதம் முதலிய வற்றினின்றும் அந்த நீலக்கடிதத்தை வேறுபிரித்துக் காட்டுகிறது. இவ்வாறு ஒன்றின் சொரூபத்தில் பிரவேசித்து வேறு பிரித்துக் காட்டப் பட்டதற்கு விசிட்டம் என்று பெயர். ஆகவே அந்தக்கரண விசிட்ட சேதனமே சீவன் எனப் படும். (இதின் நீலத்தன்மைக்கு விசேடனம் என்றும் விசேடனத்தால் பிரிக்கப்பட்டதற்கு விசிட்டம் என்றும் பெயர்.)

இவ்வாறு நான்கும் வெவ்வேறாய்த் தோன்றினும் நான்கும் சேதனமாகிய பிரம்ம சொரூபமே என்று விளங்குவது காண்க.

[இப்போது சீவன், சீவசாக்ஷி என்ற இரண்டின் வித்தியாசத்திற்கும் அந்தக் கரணமே காரணமாயிருக்கிற தென்று அறியலாகும். அந்தக்கரணமெனினும் மன மெனினும் மாயை யெனினு மொக்கும். ஆகையால் மன மொழிந்தால் சீவன், சீவ சாட்சி என்ற பேதம் ஒழியும். அதாவது சீவத்தன்மை அல்லது சீவன் என்ற நிலைமை யொழிந்து போய், சீவசாட்சி மாத்திரமே (கூடஸ்தனே) நிலையாய் நித்தியமானதாய் நின்று விளங்கும்.]

வாச்சியார்த்த இலட்சியார்த்தங்கள்.

'தத்துவமசி' மகாவாக்கியத்தில் உள்ள தத் + துவம் + அசி என்ற மூன்று பதங்களுக்கும் வாச்சியார்த்தம் இலட்சியார்த்தம் கீழ்காணுமாறு:-

பதங்கள்.	வாச்சி யார்த்தம்.	இலட்சி யார்த்தம்.
தத் (அது)	ஈசுவரன்	பிரம்மம்
துவம் (நீ)	சீவன்	கூடஸ்தன்
அசி (இருக்கிறாய்)	இருக்கிறான்	இருக்கிறது.

நீ அதுவாயிருக்கிறாய். அதாவது "(கூடஸ்தன் அல்லது சீவசாக்ஷி யாகிய) நீ (அதுவாகிய) பிரம்மமா யிருக்கிறாய்" என்பதே இதன் பொருளாகும்.

இவற்றில் சீவனும் ஈசுவரனும் மாயா சம்பந்தம் உடையவை—ஈசுவரன் சத்துவகுணமாயை, அதாவது சுத்தமாயா சம்பந்தமுடையவன். சீவன் இரஜோகுணமாயை, அதாவது அசுத்தமாயை அல்லது அவித்தை சம்பந்தமுடையவன். ஈஸ்வரன் மாயையைத் தன்வயப்படுத்தி யுள்ளவன். சீவன் மாயையின் வயப்பட் டிருப்பவன். ஆயினும் இருவரும் மாயாசம்பந்த முடையவர்களே.) கூடஸ்தனும் பிரம்மமும் மாயையற்றவை. காய்ச்சப்பட்ட பாலில் நெய் எப்படி கலந்து ஒன்றாய்த் தோன்றுகிறதோ, அவ்வாறே சீவனும் சீவசாட்சியும் (ஆகிய வாச்சிய இலட்சியார்த்தங்கள் அவிவேகத்தால்) ஒன்றாகவே தோன்றுகின்றன. மத்தினால் கடைந்து நெய்யை வேறு பிரித்து எடுப்பதுபோல், விவேகத்தால் இலட்சியார்த்தமாகிய சீவசாட்சியே நீ யென்றறிந்து அச்சாட்சி மாத்திரமாய்ப் பிரிந்து கொள்.

இதையே அப்பர் சுவாமிகள்,

"விறகிற் றீயினன் பாலிற்படு நெய்போன்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியா
னுறவு கோனட் டுணர்வுக் கயிற்றினன்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே" என்றருளினார்.

நாம் மாயையாகிய மனதோடுகூடி அதன்வழிப்பட்டு அஞ்ஞான நிலையிலிருப்பதால் சீவனாயிருக்கிறோம். அந்த நிலை நமது உண்மையான நிலையல்ல. சாட்சிமாத்திரமாய் இருப்பதே நமது உண்மை நிலை. ஆகையால் மனோநிக்கிரகம் செய்து அதைவிட்டுப் பிரிந்து மனதின் சேட்டைகளை எதிரிட்டு நோக்கும் சாட்சியாய் நின்றுவிடுவோமாயின் மலரகிதமான கூடஸ்தனாகிறோம். அப்போது நமது நிஜ சொரூபத்தை யறிகிறோம். அதை யறிந்தால் நமக்குள் மறைந்து நின்ற பரமாத்ம சொரூபம் தோன்றும். தலைவனாகிய பரமாத்மாவையு மறியலாம். இதுவே மேற்கண்ட தேவாரத்தின் கருத்தாகும். (தொடரும்.) சீடன்.

ஓர் அதிசய விருந்து

குப்பம் கிராமம் சாலியா பாளையம் என்னும் ஊரில் ஜனவரிமீ 16வ வெள்ளிக் கிழமை மாலை 2-மணிக்கு ஊர்க்காரர் பலர் ஒன்று சேர்ந்து ஊருக்கு வெளி மைதானத்தில் பறக்கும் பக்ஷி ஜாதிகளுக்கு நவதானிய விருந் தளித்தார்கள். அப்போது பல விதமான அநேக பக்ஷி யினங்கள் வந்து தின்று நீர் குடித்துச் சென்றன. சில பக்ஷிகள் நல் விருந்தை விட்டுச் செல்ல மனம் வராமல் அங்கேயே யிருந்து, வரும் பக்ஷிகளுக்கு உபசாரம் செய்து அழைத்தன. மறுநாள் காலையில், அநேக கோடி பக்ஷி யினங்கள் வந்து வயிறாரத் தின்று வாயாரப் புகழ்ந்து வாழ்த்தி சந்தோஷத்தைக் காட்டுவதற்கு எல்லாப் பக்ஷிகளும் ஒன்று கூடித் தங்கள் தங்கள் பாஷையால் பேரிரைச்சலோடு கா, கூ, கா, கூ என்று வெகுநேரம் பாடிப் புகழ்ந்து சென்றனவாம்.

பழனியப்பன்.
சாலியப் பாளையம்.

குறிப்பு:—இது புகழத்தக்க ஜீவகாருண்ணியச் செய்கையே. இத்தகைய விருந்தளித்த கருணையாளர்கள் ஜீவ வதை செய்து அவற்றின் புலாலைப் புசியாத புண்ணிய சீலரா யிருப்பார்களாயின் அது இதனினும் பெரிய ஜீவகாருண்ணியச் செய்கையே யாகும்.

பத்திரிகாசிரியர்.

சிறுவர்க் குரிய சிறந்த உபதேசங்கள்.

1. ஒருவனுடைய குணத்தை அவன் பேசும் பேச்சி லிருந்தே தெரிந்து கொள்ளலாம். ஆகையால் பிறரிடம் பேசும் போது பேசும் விஷயம் யாது என்பதை முதலில் நன்றாய்த் தெரிந்து கொள்ள வேண்டும். இந்த விஷயத்தை எப்படிப் பேசுவது என்று தீர்மானித்துக் கொள்ள வேண்டும். பெரியவர்களிடம் அறியாமையினால் ஏதேனுங் குற்றமாகப் பேசி விட்டால் அப்படிப் பேசியது குற்ற மென்பதை உணர்ந்த வுடன் அவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ள வேண்டும்.

2. பாப புண்யங்களை நாம் ஒவ்வொரு நாளும் பெரும்பாலும் கலந்தே செய்கின்றோம். அவற்றின் பயன்களாகிய சுகதுக்கங்களையும் அவ்வாறு கலந்தே அநுபவிக்கின்றோம். ஆதலின் நீ பாபத்திற்கு அஞ்சு, அது கொடிது!

3. வெள்ளம் வரும் முன் அணை போட்டுக் கொள்ள வேண்டும் என்பது ஒரு பழமொழி. உலக வாழ்வில் மனிதனுக்குப் பல தீமைகளும் நன்மைகளும் உண்டாவது இயல்பு. நன்மை யுண்டான போது நாம் அதைச் சுகமே அனுபவிக்கின்றோம். தீமை யுண்டான போது வருந்துகின்றோம். ஆகையால் தீமை யுண்டாகாதபடி ஒவ்வொருவனும் தன்னால் இயன்ற வரையில் காத்துக் கொள்ள வேண்டியவனாகின்றான். தீமைவரும் முன்பே அது அணுகாதபடி காத்துக் கொள்வதுதான் மதியாகும். தீமை வந்தபின் பார்த்துக் கொள்வோமென் றிருந்து அப்பால் அதனைத் தடுக்கக் கஷ்டப்படுவது அறிவீன மாகும்.

தீமை வருமுன் காத்துக் கொள்வது வெள்ளம் வருமுன் அணைபோட்டுக் கொள்வதற்கு ஒப்பாகும். தீமை வந்தபிறகு கஷ்டப்படுவது வெள்ளம் வந்த பின் அணை கட்டுவதற்கு ஒப்பாகும். வெள்ளம் வந்த பின் அணை கட்டுவது கஷ்டமல்லவா? அதுபோல் தீமை வந்தபின் தடுப்பதும் கஷ்டமாம்.

மானிடர்க்கு வரும் தீமைகள் பல. அவற்றுள் மிகக் கொடியது நோயே யாகும். இதனாலேதான் ஔவைப் பிராட்டியார் நோய்க் கிடங் கொடேல் என்று கட்டளை யிட் டருளினர்.

ஆகையினால் நாம் ஒவ்வொருவரும் நோய்க் கிடங்கொடாமல் தேகத்தைக் காத்துக் கொள்ள வேண்டியது இன்றி யமையாத கடமை யாகும். இடங் கொடாமல் காத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லுகிற படியினால், அது வருவதன் முன்பே காத்துக் கொள்ள வேண்டும் என்பதா

கிறது. ஆகையால் வந்தபின் காத்துக் கொள்வோ மென்றிருப்பது பேதமையாகும்.

4. உன்நிலமைக்குத் தக்கபடி நீ நடத்தல் வேண்டும். நிலமை மீறி நடப்பவன் ஆபத்தின் வாயில் தானே தன் தலையைக் கொடுப்பவனுவான். ஓடையிலுள்ள தாமரைக்குச் சூரியன் தந்தை; தண்ணீர் தாய். அத் தாமரையின் வேரை அறுத்து விட்டால் அதன் தாயாகிய தண்ணீரே அதனை அழுகச் செய்து அழிக்கும். அதை யெடுத்துக் கரையின் மேல்போட்டாலோ தந்தை யாகியசூரியன் காய்ந்து அதனை அழிக்கும். இப்படியே தன் நிலைமை தவறியவன் தீமையை யடைவான்.

5. நீ உன் வாழ்விலே கண்ணிய மடைய விரும்பினுல், எறும்பு, தூக்கணங் குருவி, காக்கை இவற்றின் செய்கையை உணர்ந்து அப்படி நடந்து கொள் என்பது ஒரு நீதியாகும்:—

கிடைக்காத காலத்தில் உதவி யாகும்படி உணவைச் சேகரித்து வைத்துக் கொள்ளும் வழக்கம் எறும்பினிட முண்டு. ஆகையால் நீயும் கிடைக்காத காலத்திற் சென்று உணவைச் சேகரித்து வைத்துக் கொள்.

தூக்கணங் குருவி குளிர் காற்று முதலியவற்றினின்று தன்னைக் காத்துக் கொள்ள அழகிய கூடுகட்டிக் கொண்டு வாழ்வதைக் காண்கின்றோம். அது போல் நீயும் நல்ல வீடுகட்டிக் கொள்.

காக்கை யானது தனக்கு ஏதேனும் உணவு கிடைத்த காலத்தில், தன் இனத்தைக் கூவிக் கூவி யழைத்து அவைகளுண்ணத் தானு முண்கிறது. இது போல் நீயும் உன் விருந்தினர்க் கிட்டுண்டு அவர்களுடைய அநுசரணையைப் பெற்றுக் கொள்.

6. மாத்ரு தேவோ பவ || பிதுர் தேவோ பவ!—என்பது வேதம். மாதா பிதாக்களை தெய்வமாக எண்ணி வணங்குதல் வேண்டும் என்பது விதியாகிறது. இதனையே ஔவைப் பிராட்டியர், அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்று கூறினர். ஆகையால் பெற்றோரை ஒரு போதும் அவமதிப்பது கூடாது. அவர்கள் நம்முடைய க்ஷேமத்தையே நாடுகிறவர்களாகையினுல் அவர்களுக்கு நாம் மாருக நடப்பது விதி கடந்த செய்கையாம். விதி விலக்கு உணர்ந்து நடவாதவன் விலங்கிற்குச் சமானமாவான்.

வரகவி திரு-சுப்ரமண்ய பாரதியார், சென்னை.

"தெய்வ மிகழேல்."

ஆத்திசூடியிலுள்ளதாகிய இவ்வாக்கியம், இரண்டாம் வேற்றுமைத் தொகைநிலைத் தொடராய், 'தெய்வத்தை இகழேல்,' என விரியும். தெய்வம்-தைவதம் என்னும் வடமொழிச் சிதைவு. இகழேல்-எதிர்மறை யொருமையேவல். இகழ்-பகுதி , ஏல்-விகுதி. (இ-ள்.) (யாவருந்துதிக்கின்ற) 'கடவுளை நிந்தியாதே,' என்பதாம்.

கடவுளைப்பற்றிய ஆராய்ச்சியில் பலர் பலவாருன கொள்கைகளை யுடையவர்கள். அவர்களைப் பொதுவாகப் பகுத்துக் கூறு மிடத்து.

(1) ஆஸ்திகர். (Theists)
(2) சந்தேகிகள். (Sceptics)

(3) அறியார். (Agnostics)
(4) நாஸ்திகர். (Atheists) என நான்கு பிரிவுகளாக்கலாம். அவர்களுள்,

(1) ஆஸ்திகவாதிகள்.—கடவுள் ஒருவர் உண்டென்றும், அவரே உலகிற்கு முதற்காரண ரென்றும், நாம் அவர்கட்டளையாகிய வேதத்திற்கூறப்படும் விதி விலக்குகளை யறிந்து நடந்துகொள்ள வேண்டியவர்க ளென்றுமெண்ணி யொழுகுவோர். இவர்கள் ஈச்சுரவாதிகளென்றும் அழைக்கப்பெறுவர்.

(2) சந்தேகவாதிகள்.—கடவுள் ஆன்மா, பந்தம் முத்தி என்பவைகளில் சந்தேகமுடையோராய் இது மெய்யோ அது மெய்யோ அல்லது இரண்டும் பொய்யோ என்னும் ஆசங்கைகொண் டுழல்வோர்.

(3) அறியாவாதிகள்.—இவர்கள், "யாவும் மனோசிந்தனையே யன்றி மற்றொன்றுமில்லை. அவை மானிடாது மதிக்கெட்டாதவை யாகையால் நாம் ஒன்றையும் அறியோம்" என்னும் நிலையிலிருந்து மதவாத மின்றி யிருப்போர்.

(4) நாஸ்திகவாதிகள்.—கடவுள் ஆன்மா என்பவற்றில் சிறிதும் நம்பிக்கையற்று "யாவும் இயற்கையாகத் தோன்றினவைகளே. இவற்றைப் படைக்க ஓர் தலைவன் வேண்டுவதில்லை" என வாதித்துக் காட்சிப்பிரமாணமொன்றினையே நம்புந் தன்மையர். இவர்களுக்கு நிரீச்சுரவாதிகளென்னும் பெயருமுண்டு.

இந்நாற் பாலருள் சந்தேகிகளை எதற்கும் சந்தேகிகளாகவும், அறியாதாரை ஒன்றும் அறியாதவராகவும், நாஸ்திகரை நாஸ்திகராகவுமே யிருக்கவிட்டு ஆஸ்திகரைப் பற்றிக் கவனிப்போம்.

ஆஸ்திகக் கொள்கையையுடைய பல மேதாவிகள் திட்டாந்த தாட்டாந்தங்களால் புறவாதிகளை வென்று தங்கள் சித்தாந்தமாகிய ஜெயஸ்தம்பத்தை நாட்டினர்.

அக்கொள்கையைத் தழுவியே, இப்பகுப்பிலும் பிற்காலத்திற் பல பல பிரிவுகளுண்டாயின. ஜீவான்மா பரமான்மாக்களின் தன்மைகள், ஜீவான்மா பரமான்மாவை (கடவுளை) அடையும்விதம் முதலான விஷயங்களில் ஒருவருக்கொருவர் மாறுபாடான கொள்கையுடைமையே இப்பிரிவுகட்குக் காரணம். இப்பிரிவினைகளே மதங்களென்னப்படுபவை. மதம் எனினும் கொள்கை எனினும் ஒக்கும். மன வாக்கினுக் கெட்டாத சமயாதீதப் பரம் பொருளைப் பற்றி யாராய்வதில் இவ்வித மாறுபாடுக ளுண்டாதல் வியப்பன்று. கடவுள் அருவன் என்போர் சிலரும், உருவன் என்போர் சிலரும், அருவுருவனென்போர் சிலரும், ஆன்மாக்களின் இருவினைகட்கேற்ப மறுபிறவி யுண்டென்போர் சிலரும், இன்றென்போர் சிலருமாகப் பலவிதக் கொள்கைகளை யுடையவர்களே யன்றி பலகடவுளருளரெனக் கூறுவா ரெவருமிலர். தத்தம் கொள்கைகளே சரியானதென வாதிக்கத் தொடங்கியதே மதவாதங்களாயின.

இம்மாறுபட்ட கொள்கைகளால் கடவுளரும் வெவ்வேறெனக்கருதி என்தெய்வம் சிறந்தது-உன்தெய்வம் தாழ்ந்ததெனக்கூறுதல் மதவாதத்திற்குப் பொருத்தமோ வென்பது ஆலோசிக்கத்தக்கது. பல நீர் நிலைகளில் மதி தனித்தனி காணப்படுவதால் பலசந்திரர்களுண் டென்பதற்கும்,

இதற்கும் எத்துணை வித்தியாசமுமில்லை. செம்மை கறுமை பசுமைகளாகிய பலநிற சுலோசனங்களை (கண்ணாடிகளை) யணிந்திருப்போர்க்கு எல்லாப் பொருள்களும் அவரவர்கண்ணாடியின் நிறமாகத்தோற்றினும், உண்மையில் அவை வேறு நிறங்கொண்டிருத்தல் போலக் கடவுளும் யார்யார் எவ்வெவ் விதமாகக் கருதி யுபாசிக்கின்றனரோ அவ்வவ்விதமாகவே யிருந்து அருள் புரிகின்றன ரென்று ஆன்றோர் அருளியுளர். இவ்வாறுகப் பேதங்களுண்டானதும் அவனது திருவிளையாடலேயாம்.

எனெனிலோ தேயங்கள் பலவாயும், அவ்வத் தேயங்களிலுள்ளோர்து அறிவு தேகமனோதிடங்கள் ஒரேதன்மையனவாக வின்றிப் பலவிதங்களாயுமிருக்கின்றன. ஆதலின் அம் முழுமுதற்பொருளே காலதேச வர்த்தமானங்களுக்கும், மாந்தரது புத்தியுத்தி சத்திகளுக்கும் ஏற்றவாறு பல வழிகளாலும் ஆன்மாக்கள் உய்ய அநேக மகான்களையனுப்பி ஆஸ்திகக் கொள்கைகளை யறிவுறுத்துவிக்கின்றனர். இவ்வாறன்றி பக்தி, தவம், யோகம் முதலாகிய மார்க்கங்களில் யாதானுமொன்றினை நியமிப்பின் கண்ணப்பன், கோசிகன், சனகன் முதலானவர்களைப்போல யாவரும் திடவைராக்கிய முடையரா யிருத்தல் சாத்தியமோ? சாத்தியமாகாதது பற்றியே பல மார்க்கங்களையுண்டாக்கி எம்மார்க்கத்தினாலாவது கடைத்தேறட்டும் என்ற கருணை பொருந்திய கருத்தாகும். "அவரவர் தொழவறு சமயமுமருளினை." என்ற பெரியார் வாக்கு நோக்கத்தக்கது. இதனையே பகவான் ஸ்ரீ கிருஷ்ணரும் பகவத்கீதையில் பார்த்தனுக்குப் போதித்திருக்கின்றனர்.

புறமதத்தில் வேறுகடவுளுளனென் றெண்ணித் தூஷிப்பவன் தான் தொழும் கடவுளையே தூஷிப்பவனாகிறான். ஆகையால் ஒவ்வொருவரும் தெய்வம் ஒருவனே யென் றுணர்ந்து தத்தம் முன்னோர் அனுட்டித்து வந்த மத மெதுவோ அதனையே நம்பிக் கடைப் பிடித்துக் கடவுளை மறவாது தந்தைக்குக் கீழ்படிந்தொழுகும் தனயரைப்போல் தீவினைக்குப் பயந்து நடப்பதே சாலச்சிறந்ததாகும்.

"தெய்வம் ஒருவனே யென்றுணர வல்லீரேல்
அருவினைகள் ஐந்து மறும்.—(ஔவை)"

ஓரூருக்குச் செல்ல விரும்பிப் புறப்பட்டா னொருவன் பல கிளைகளாகப் பிரிந்து செல்லும் அநேக பாதைகளைக் கண்டு இவற்றில் எம்மார்க்கத்திற் செல்வதென மயங்காநிற்புழி ஆண்டுப் போந்தா னொருவனைத் தான் வினவலும், அவன் "நுமக்குப் பிரியமான தோர் மார்க்கத்திற் செல்லுக. யாவும் ஓரூர்க்கே செல்வனவாகும்" எனக் கூறும் கதைக் கொப்பாகும் மதமார்க்கங்களும். இது நோக்கியே மிக்க அநுபவியாகிய திருமூல மகரிஷியும்,

"ஒன்றதே பேரூர் வழியதற் காறுளது
என்றதே போலும் இருமுச் சமயங்கள்
நன்றிது தீதிது என்றுரை மாந்தர்கள்
குன்று குரைத்தெழு நாயை யொப்பார்களே" என்றார்

(தொடரும்) பூ. ஸ்ரீநிவாஸன்,
தமிழ்ப்பண்டிதர், இராணிப்பேட்டை.

ஓர் கடிதம்

ஓட் ! ஓட் !! ஓட் !!!

இச் சென்னைமா நகரில் கடந்த சில தினங்களாக 'ஓட் ஓட் ஓட்' என்ற சத்தமே அனேக வீதிகளில் பெருஞ் சத்தமா யிருக்கிறது. அதிலும் இரண்டு நாட்களாய் (ஜனவரி 22, 23 தேதிகள்) பகலும் இரவும் நகரத்தின் மேற்கிலுள்ள ஒரு பக்கத்தில் இதே கோஷ்டமா யிருக்கிறது. மோட்டர் வண்டிகள், கோச் வண்டிகள், பைசிகில்கள் முதலியவைகளின் சத்தம் இரவு பனிரெண்டு மணிக்கும் வீதிகள் அதிர்ந்து போகும்படி கேட்கப் படுகிறது. நகர சங்கத்தில் (முனிஸிபாலிடி) நகரத்தின் மேற்பாலுள்ள ஒரு பிரிவுக்கு இருக்க வேண்டிய அவயவியின் (கமிஷனர்) வேலை காலியா யிருக்கிறது. இதற்கு இருவர் அபேக்ஷகர்களாக ஏற்பட்டு அப் பதவியைய டைய முயற்சி செய்கிறார்கள். இவர்களில் ஒருவர் செல்வந்தர் மற்றவர் கல்விவந்தர்.

ஓட் கொடுக்கக் கூடியவர்களை வசப்படுத்தச் சாதாரணமாகவே செய்யப்படும் முயற்சிகளோ பிரமாதமாயிருக்கின்றன. எத்தனையோ பேர் ஒவ்வொருவருக் காகவும் பறந்து அலைந்து ஒவ்வொரு ஓட்டரிடமும் சென்று பலவாறு முயற்சி செய்கிறார்கள். இவர்கள் செய்யும் சில விஷயங்கள் அறிவாளிகளுக்கு நகைப்பை யுண்டாக்கத் தக்கவைகளா யிருக்கின்றன. "நீ முன்னமே அவருக்கு வாக்குக் கொடுத்திருந்தால் பரவாயில்லை. அவர் மோடாரிலேயே யேறிச் செல். அவர் ஹோட்டலிலேயே பலகாரம் திருப்தியாய்ச் சாப்பிடு. ஓட் கொடுக்கும்போது மட்டும், எங்களவர் பெயருக்கு நேராய்க் கோடு கிழித்துவிடு" என்று ஓட்டர்களுக்குச் சில ஏஜெண்டுகள் போதிக்கிறார்கள்.

அந்தக் கமிஷனர் பதவியை யடைய இவ்வாறு அதிகப் பணச் செலவும் பெரு முயற்சிகளும் எடுத்துக் கொள்ளும் இவர்கள் அனைவோரும் சுய நலம் கருதாமல் பொது நலத்திற்கு உழைக்க வேண்டு மென்ற எண்ணங் கொண்டே முன்வருபவர்களா? அப்படி நினைப்பதற் கில்லை. நமது நாட்டார் அவ்வாறு அத்தகைய விஷயங்கட்கு இவ்வளவு பொருளையும் சிரத்தையையும் செலவு செய்வார்களாயின் நம் தாய் நாடு இந்தப் பரிதாபமான நிலைமையில் இன்னும் இருக்குமோ? அதோடு இவர்களில் எத்தனை பேர் அப்பதவிக்குரிய தொழிலைச் செய்யச் சற்றும் சக்தியற்றவர் களாக விருக்கிறார்கள் அநேகர்.

இது ஒரு பக்க மிருக்க, ஓட் கொடுப்பவர்களைக் கவனிப்போம். அவர்களில் பெரும் பாலார்க்கு ஓட் என்பது இன்ன தென்றே தெரியாது. அதன்பொறுப்பு எத்தன்மையது? கமிஷனர்களாய் நியமிக்கப் படுபவர்கள் அங்கு போய் என்ன செய்கிறார்கள்? என்னத்திற்காக இவர்கள் அந்த வேலைக்குப் போக வேண்டும்? என்பன வாதிய ஒன்றுமே தெரியாது. அது தெரிந்தாலல்லவோ 'அந்த வேலையை யிவன் செய்யச் சக்தியும் சிரத்தையும் உடையவனு' என்பதை யறிந்துதான் நாம் இவனுக்கு ஓட் கொடுக்க வேண்டு மென்று அறிவார்கள். ஏனெனில் ஓட் கொடுக்கும் சுதந்தரம் ஒருவனுடையஇலௌகிக நிலைமையின் அளவைப்பார்த்து கொடுக்கப்

பட்டிருக்கிறதே யன்றி, அவன் அறிவின் அளவைப் பார்த்துக் கொடுக்கப் படுவதன்று. ஒருவனுக்குச் சொந்த வீடிருந்தால் அல்லது குறித்த அளவு தொகை வரி செலுத்துகிறவனு யிருந்தால் ஓட்டுக்கொடுக்கலாம் என்று விதித்திருக்கிறது. அவன் கல்வி அறிவோ—அவனுடைய குடல் முழுமையும் கழுவிப் பார்த்தாலும் 'அ' என்ற அட்சரமே அகப்படாது. அவன் எந்த யோசனை மேல் இன்னவனுக்கு ஓட்டுக்கொடுப்பது என்று தீர்மானிப்பான். ஆகையால் "சே! அவர் பெரிய செல்வர்—அப்படிப் பட்டவர் நம் வீட்டிற்கு வந்து நம்மைக் கேட்கும் போது" என்று, அவர் வந்ததையும், அவருடைய மோடார் வண்டியில் ஏறிக் கொண்டு தான் போவதையுமே பெரியகௌரவமாய் எண்ணிக்கொண்டு அவருக்கே ஓட்டுக்கொடுக்க வேண்டும் என்று எண்ணிவிடுகிறான். நம் நாட்டில் உத்தியோகஸ்தரல்லா தாரில் பெரும் பாலார்க்குக் கல்வியில்லாக் குறையே இந்தச் சீர்கேட்டிற்குக் காரணம். அந்தோ இதைச் சிந்தித்து இவர்களுக்கு ஆரம்பக் கல்வியேனும் இலவசமாய்ப் போதிக்க ஏற்பாடு செய்ய வேண்டு மென எந்தச் சபையவயவியும் முன் வரும் அக்கரை யுடையவராயில்லை. இது நம் தாய் நாடு செய்த பாபமோ அறியோம்.

"நாமே அவரவர்கள் நிலைமைக்குத் தக்கபடி வருடம் இவ்வளவென்று பிரிவு போட்டுக் கொண்டு ஒரு தொகை சேர்த்து நமது நகரத்திற்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொள்கிறோம். ஆங்காங்கு அப்போதைக் கப்போது நேரிடும் குறைகளைச் சீர்படுத்திக் கொள்வதற்குத் தக்க ஏற்பாட்டைச் செய்வதற்காக அந்தந்தப் பிரிவிற்கு ஒருவரை நாமே நியமனம் செய்து அவயவியா யனுப்புகிறோம்." என்ற விஷயமே அனேகருக்குத் தெரியாது.

அவயவியாய்ச் செல்வோர், தாம் எந்தப் பிறிவிற்கு ஏற்படுத்தப் படுகிறோரோ, அந்தப் பிறிவிலுள்ள ஸ்தலங்கள், வீதிகளின் நிலைமை, ஜனங்களின் நிலைமை, குறைகள், சுகாதாரவசதி முதலிய யாவும் நன்கறிந்தவராகவும், கமிஷனர் பதவி கிடைத்தபின் அப்போதைக்கப்போது தம் பிறிவிலுள்ள பல வீதிகளையும் நேரில் போய்ப் பார்த்து நகரசங்கச் சிப்பந்திகளால் நடக்கும் வீதிகள் சுத்தி செய்தல், முதலிய யாவும் கிரமமாய் நடந்து வருகின்றனவா? ஜலவசதி, வீடுகளின் சுத்தி முதலியவை திருப்தியான நிலைமையிலிருக்கின்றனவா? என்பவைகளைக் கவனிக்கும் சிரத்தையுடையவராகவும் இருத்தல் வேண்டும். அவ்வாறு சிரத்தை யுடையவரேனும் நகர சங்கம் சபைகூடி யிருக்கும் போது, அச் சபை முன் தமது பிரிவின் குறைகளை யெடுத்துக் கூறி அவற்றை நீக்கச் சபையோர் சம்மதிக்கும் வண்ணம் பேசக் கூடியவரா யிருக்க வேண்டும். அவர் தமது பதவிக்குரிய சுதந்தரங்கள் இன்னவை யென்று அறிந்தவரா யிருப்பதோடு பேசும் சக்தியு முடையவரா யிருந்தாலன்றி அத்தகையோரால் அவர் பிரிவிற்கு ஒரு நன்மையு முண்டாகாது. அதிலும் இப்போது நம் நாட்டாரே நமது சொந்த விஷயங்களைக் குறித்துப் பேசுவதற்காகக் கூடும் சபையில்கூட நமது தாய்ப்பாஷையை விட்டு அன்னிய பாஷையில் பேசுகிறார்கள். அந்தோ! நமது தாய்ப்பாஷையை நாமே இத்தகைய அகௌரவத்திற் குள்ளாக்கி அதனுல் சீர்கேடு மடைகிறோம். "பூர்வீக முதல் நாகரிகம் பெற்றவர்கள், மகான்களுடைய சந்ததியார்" என்று பெருமை பாராட்டிக் கொள்

ளும் நாம் செய்யும் இத்தகைய அநீதியை யுலகில் வேறெந்த நாட்டாரும் செய்யார்க ளென்பது திண்ணம். எவ்வளவோ கெடுதியை யுண்டாக்கும் இக்குறையை நீக்க எந்தச் சபை யவயவிகளும் முன் வராதிருப்பது பெருந் துக்கமான விஷயமே. மேற்கண்ட காரணங்களால் நகரசங்க அவயவியாய்ச் செல்வோர்க்கு ஆங்கிலமும் தெரிய வேண்டியதா யிருக்கிறது.

அந்தோ! ஓட்டுக்கொடுக்கும் நம்மவர்கள் இத்தகையோருக்கே நாம் ஓட்டுக்கொடுக்க வேண்டும் என்பதை யின்னும் அறியாதவர்களாகவே யிருப்பதால் செல்வம், தாக்ஷிண்யம், சிபாரிசு இவற்றைக் கருதி ஓட்டுக் கொடுக்கும் நிலைமையிலேயே இருக்கின்றார்கள். ஆனால், இச் சென்னை யில் இவ் விஷயமாய் இவ் வருடம் உண்டான கிளர்ச்சி போல் எந்த வருட மும் உண்டான தில்லை யென்றே கூறப் படுகிறது. ஆகவே இனிச்சீக்கிரத் தில் எத்தகை யோர்க்கு ஓட்டுக்கொடுத்து நமது பிறிவிற்கு அவயவியாய் அமரும்படி செய்ய வேண்டு மென்பதையும் நம்மவர்கள் அறிந்து கொள் வார்களென்றே நம்புகிறோம்.

கல்விக் குறைவால் நமக்கு நேரிடும் கெடுதிகளைப் பலதரம் திருஷ் டாந்தமாய்க் கண்டும் இனியாவது பிரதமக்கல்வி யேனும் யாவரும் அடை யும்படி செய்ய அதற்குத் தக்கவர்கள் முயற்சி யெடுத்துக் கொள்ளா மலே யிருப்பது மிக்க பரிதாபமே. பரம்பொருளாகிய கருணாநிதி யேனும் அவர்கள் மன நாட்டத்தைத் தூண்டி நம் தாய் நாடு க்ஷேம மடை யச் செய்ய வேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறோம்.

23—1—1920 உண்மையுரை.

ஓர் கடிதம்

ஹா! என் கண்மணி போன்ற "ஆனந்த போதினியே" உன்போல் அனேகம்பத்திரிகைகள் வெளியாகி வருகின்றனவல்லவா. உன் அருமையே அருமை. உன் கியாதியே கியாதி. கருணையுடையோராகிய பலபரோப காரிகளைச் சேர்ந்திருக்கிறாய் என்று உன்னைப் படிப்பதினால் தெரிகிறது.

நாளது தைமீ எங்கள் கிராமம் பண்ணையாரவர்கள் வாசகசாலை வந்த தும் உன் கியாதிகளைக் கொஞ்சநேரம் பேசி, அதி விருப்பத்துடன் வாசிக்க ஆரம்பித்தோம்.

271 முதல் 274 பக்கங்களை வாசித்து வரும்போது பொது ஜனங் களின் நன்மைக்காக உழைக்கிற ம-ா-ா-ஸ்ரீ ரூவ்ஸாஹேப் டாக்டர் இரா மாராவ் அவர்கள் சிறுவர்கள் சுருட்டுக் குடிப்பதால் வரும் கெடுதல்களைப் பற்றி வரைந்துள்ள வியாசத்தை திரும்பத் திரும்பப் படித்துக் கவனத் துடன் பார்வை யிட்டோம்.

ஷிவிஷயத்தைக் கவனமாய்க் கேட்ட பேர்கள், வாசித்தபேர்க ளெல் லாம், ஷிகெட்டவழக்கத்துடனிருக்கும் ஒவ்வொருவருக்கும் எடுத்துரைத் தார்கள்.

ஷி விஷயத்தை அநேகர் ஒப்புக் கொண்டு சுருட்டு முதலிய வஸ்துக் களினால் ஏற்படும் கெடுதல்களை உணர்ந்து, ஷி தீய வழக்கத்தினின்றும்

விலகிக் கொண்டார்கள். ஷை வஸ்துக்கள் அதிக விற்பனையாகி வந்த கடைகளில் விற்பனையும் குறையலாயிற்று. இதே பேச்சு எங்கும் நிறையலாயிற்று. இது போலவே ஒவ்வொரு இடங்களிலும், அருமை வாய்ந்த ஆனந்த போதினியை வாசித்த ஒவ்வொருவரு முணர்ந்து அதன்படியே நடந்திருப்பார்க ளென்று நம்புகிறேன்.

ஒரே, ஒரு ரூபாய்—அதிக குறைவான இச் சந்தாவைப் பெற்றுக் கொண்டு தேச உழைப்புக்காக முன் நின்று உழைத்து வருகிற பத்திராதிபரவர்களுக்கும், நாகரிகத்தை அடையச் செய்கிற கனவான்களுக்கும், ஜனங்களின் நன்மைக்கென்று பரோபகாரமாய் உழைக்கிற ஷை டாக்டரவர்களுக்கும் ஏனையோர்க்கும் நாம் சதா நன்றி பாராட்டக் கடமைப் பட்டுள்ளோம்.

இவர்கள் நீடூழி வாழக் கடவுள் கருணை புரிவாராக.

தங்களன்புள்ள,

S. V. பிறவிப் பெருமாள் பிள்ளை,

யூனியன் மெம்பர், செங்குளக்குறிச்சி.

குறிப்பு:— நேயர்களே! பத்திரிகை, சஞ்சிகைகளை மேல் போக்காய் வாசித்து அப்போதே மறந்து விடுவதில் ஒரு பயனுமில்லை. அவற்றிலுள்ள விஷயங்களைக் கவனித்து அதனால் பயனடைய முயல்வது தான் அறிவாளிகளின் நடக்கை யாகும் என்பதற்கு இது ஒரு அத்தாட்சி யாகும். இவ்வாறு மற்ற நேயர்களும் ஆங்காங்குச் சபை கூட்டி இச் சுருட்டின் கெடுதியினின்றும் நம் சந்ததியாரைக் காப்பாற்ற முயலவேண்டு மென்பதற் காகவே, இதை வெளியிடுகிறோம். தாய் நாட்டின் க்ஷேமத்தைக் கோரும் தேசாபிமானிகளாகிய அறிவாளிகள் இவ் விஷயத்தில் சிரத்தை யெடுத்துக்கொள்ளப் பிரார்த்திக்கிறோம். அப்போதுதான் பொது நலத்திற் குழைக்கும் பத்திராதிபர்கள், பத்திரிகாசிரியர்கள், விஷயதானம் புரியும் நண்பர்கள் இவர்கள் உழைப்புக்கு நீங்கள் தக்க பரிசளித்த தாகும்.

பத்திரிகாசிரியர்.

இல்லறம்—சரீரவியல்.

"ஈதலறந் தீவினைவிட் டீட்டல்பொரு ளெஞ்ஞான்றுங்
காத லிருவர் கருத்தொருமித்—தாதரவு
பட்டதே யின்பம் பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு"

என்பதனால், நாற்பாற் பொருள்களையுஞ் சுருக்கி விளக்கி யருளிய அன்னையார் "எஞ்ஞான்றுங், காத லிருவர் கருத்தொரு மித் தாதரவு பட்டதே யின்பம்" என்று கூறி யின்பப் பாலை விளக்கு முகத்தானே யில்லறத்தையும் சிறப்புற விளக்கி யருளினர். காதலனுங் காதலியு மாகிய விருவரு மனமொத் திருந்தாலன்றி யின்பமு மில்லை; இல்லறமும் நடவாதென்பது விளங்கும். இருவர் மனமு மொத்திருக்கச் செய்வதே விவாகத்தாலாய பயனும். மன மொத்த ஆணும் பெண்ணுமாகிய விருவாது

பரிச வுணர்ச்சியா னுகரப்படுவதே யின்பமாம். இன்பங்களுள் இதற்கிணை யாய வின்பம் வேறொன்று மில்லையாம். உலக இன்பங்களுள் எல்லாவற் றுள்ளு மிதுவே சிறந்தது. பேரின்பமாகிய மோட்ச வின்பத்துக்கும் எடுத் துக் காட்டாக நிற்பது. இவ் வின்பத்தை யனுபவிக்கும் ஆடவர்கள் மகளி ரது சரீர வியல்பைச் சிறிதாராய்வாம்.

ஆண் சரீரமும் பெண் சரீரமும் ஒன்றோ டொன்று மாறுபட்ட வியல் பினை யுடையன. இதனை யாராய்ந்தறிய மாட்டாதார் இன்ப துன்பங் களும் சுகானுபவங்களும் இருவர்க்கு மொத்திருந்தா லிருவரு மொரு தன் மையாரேயாக ஆடவர் மேற்பட்டா ரென்பதனை மறுத்துரைப்பர். அங் ஙன மாயின் ஐயறி வுயிர்களாகிய பசு பட்சிகளுக்கு மின்ப துன்பங்கள் மனிதரோ டொத்திருத்தலால் அவைகள் மாட்டு மவ்விரக்கம் பாராட்டத் தக்கதேயாம். அது நிற்க, சரப் பொருள்கள் எல்லாவற்றுள்ளும் ஆண பெண் சரீரங்கள் வேறு பாடு கொண்டனவே யாம். ஏனையவற்றை யொழி த்து மனிதர் சரீர வியல்பையே நாமாராய்வாம். ஆண் பெண் சரீரங்கள் அமைப்பிலேயே வேற்றுமைப் படுவனவாம். அதை வெளித் தோற்றமாகிய வுறுப்புக் களினாலேயே பிரத்தி யட்சமாய்க் காணலாம். உள்ளுறுப்பு களிலும் பல வேறுபாடுக ளுண்டு. இவற்றைச் சரீர சாஸ்திர முணர்ந்தார் வாய்க் கேட்டுணர்ந்து கொள்க. ஈண்டு விரிக்கிற் பெருகும்.

ஆண் சரீரம் வன்மை யுடையது. பெண் சரீரம் மென்மை யுடையது. இதனாலேயே பெண்களை மெல்லியலார் என்று நூல்கள் கூறும். இதற் கேதேனுமோர் காரணமிருத்தல் வேண்டும். அது பரிபாகத்தைப் பற்றி யதே யாம். அதாவது தாயினிடத்தி லிருந்து பெற்று வந்த வுதிரம் பரி பாகப் படுவதின் வேறுபாடேயாம். பெண் சரீரத்தி லுள்ள உதிரம் பரி பாகப் படுவதற்குப் பிறந்தது முதல் எழு வருடங்கள் செல்லும். இவ்வேழு வருஷ காலத்தையும் பேதைப் பருவமென்பர். இக் காலத்திற்குள் பெண் களுக்குரிய நாண மென்னுங் குணந் தோன்று வதில்லை யாதலால் அது பேதமைப் பருவம் (அறியாத காலம்) என்னப் பட்டது. எழு வருடங் கட்கு மேல் பரிபாகப் பட்ட உதிரம் வேறு நிலைமையை அடையத் தொ டங்கும். வேறு நிலைமை யாவது "இரஜஸ்" என்னும் நிலை. இதுவே காதலுண்டாவதற்குக் காரணமா யுள்ளது. எட்டு வயது முதல் பதினொரு வயது அளவும் அது வேறாய்ப் பரிணமித்தலுக்குக் கால வளவையா மென்று நூல்கள் கூறும். இதனையே பெதும்பைப் பருவ மென்பர். இந் நான்கு வருஷ காலத்துக்குள் பெண்களின் இயல்புக் குரிய நாணம் முதலிய குணங்கள் ஒன்றன்பின் னொன்றாய்த் தோன்றும். அதற்கு மேல் பன்னிரண்டு பதின்மூன்றாம் வயதுக்குள் ரஜஸ் முதிர்ச்சி பெற்று உலக இன்பானுபவத்தில் இச்சை யுண்டாகும். அதன் வழியே ருது காலம் நேரிடும். இதனையே மங்கைப் பருவ மென்று நூல்கள் கூறும். ருதுப் பருவமென்று ஸ்மிருதிகள் கூறும். இதனை விவாகப் பிரகாணத் தில் சிறிது கூறுவ தவசியமாகையா லீண்டு நிறுத்தி மேற் செல் வாம்.

இது காறும் கூறிப் போந்தமையால் பெண்கள் சரீரத்தின் உதிரம், உதிர மென்றும் இரஜஸென்றும் இருவகையான நிலைமையை யடைந்து உலக இன்பானுபவத்துக்குக் காரணமாய் நிற்கு மென்றுங் கொள்ளக்கிடந்

தது. இந்த இரஜஸ் என்ற உதிரமே பெதும்பைப் பருவத்தி னாரம்பத்தில் சிரசினின்றுங் கீழ் நோக்கி யிறங்கும். அப்போது முகத்தில் பள பளப்புத் தோன்றும். கண்கள் மலர்ந்து விசாலப்பட்டு அழகுடையனவாம். இவ்விரஜஸ் சரீரத்தி லமைந்துள்ள சந்திராம்ச மாகிய அமிர்த கலையுடன் கலந்து தடித்துக் காம இச்சையை யுண்டாக்குவதற்குக் காரணமாயிருத்தலால், "காமந் தோன்றுங் காலம் வந்தால் சோமன் அனுபவிக்கிறு" னென்று ஸ்மிருதிகள் கூறுகின்றன. இவ் வெண்ணம் ஒன்பது, பத்து வயதுக்குள் தோன்றுவதாம். அதன்மேல் கீழ் நோக்கி யிறங்கி மார்பிலுள்ள பையை நிரப்பும். இதுவே ஸ்தன மென்று கூறப்படும். இக் காலத்தில் காம இச்சை சிறிது அதிகப்படும். காமம் அக்கினியின் அம்சம் பெற்றுத் தோன்றுவதால், "ஸ்தனம் தோன்றினுல் அக்கினி தேவன் அனுபவிக்கிருன்" என்று ஸ்மிருதிகள் கூறுகின்றன. அக்கினி அனுபவிக்கிருன் என்ருல் அக்கினி போலுங் கனற்றுவதாகிய காமம் தோன்று மென்பது ஸ்மிருதிகள் கருத்து. ருதுகாலமாகிய மங்கைப் பருவத்தில் காம இச்சை முதிர்ச்சி பெறுவதால் "ருது பர்வம் வந்தால் கந்தர்வன் அனுபவிக்கிருன்" என்று ஸ்மிருதிகள் கூறுகின்றன. காமலீலைகள் கந்தர்வ ஜாதியாருக்கு விசேஷ மாதலால் அங்ஙனம் கூறப் பட்டது.

இராஜஸ் என்பது உதிரத்தின் வேறு நிலைமையாதலே யன்றி வேறின்மையால் பரிபாக முதிர்ச்சி பெறுததேயாம். பரிபாகப் படாதபோது அதிக மலத்துடன் கலந்திருக்கும். அதிக அளவுள்ள தாயிருக்கும். இதுவே கர்ப்பாசயத்தில் நிரம்பி நின்று சிசுக்களின் சரீரோற்பத்திக்குக் காரணமாய் நிற்கும். மயிர்க்கால் தோறு நிரம்பி நிற்கு மாதலால் அதிக இச்சையை யுண்டாக்கும். மல மய மாதலால் சரீரத்தில் நெடுங்காலந் தங்கி யிருந்தால் பலவகையான வியாதிகளை யுண்டாக்கும். பிராண ஹானியையும் செய்யக் கூடும். ஆகையா லது சரீரத்தில் நிலைத்து நின்று விட்டால் பெண்களுக்கே கேடு விளைக்குமாதலால் அதை நிவர்த்திக்கும் பொருட்டே கடவுளானவர் அவர்களுக்கு ருது கால மென்ருெரு கால வரையறையை நியமித்து மாதந் தோறும் அதனை வெளிப்படுத்தத் திருவுளங் கொண்டார். இதுவே யாடவர்களுக்குச் சுக்கிலம் போன்று காம இச்சையை யுண்டாக்குவதா மென்று கொள்க. இவ்விதமான பரிபாகக் குறைவே பெண்கள் சரீரத்தை மென்மை யுள்ளதும் பலஹீன முள்ளது மாகச் செய்வதா மென்றுணர்க. இதற்கு ஆகர்ஷண சக்தி அதிகமாம். இது பெண்களின் வயதுக்கு அதிக மாகக் குறைந்த வயதுள்ள இளம் பருவத்து ஆடவர் சரீரத்தைத் தின்று விடும் சக்தியுமுடையது. இதனுலேயே "இருபத்து நான்கு வயதுள்ள ஆடவன் எட்டு வயதுள்ள பெண்ணை மணக்கக் கடவனென்றும், முப்பத்திரண்டு வயதுள்ள ஆடவன் பன்னிரண்டு வயதுள்ள பெண்ணை மணக்கக் கடவன்" என்றும் ஸ்மிருதிகள் விவாக வயதை நிர்ணயித்ததா மென்க. இவ்வியல்பினுல் பெண்கள் சரீரம் ஆடவர் சரீரத்தோடு மாறு கொண்டு விரோதம் பயப்பதா மென்று கொள்க.

இனி ஆடவர்க்கோ அவ்வாறன்று. ஆடவர் சரீரத்திலுள்ள உதிரம் இரண்டாம் நிலைமையை அடையப் பன்னிரண்டு வயதாகும். அதன் மேல் அது சுண்டி சுக்கில மென்னும் நிலைமையைப் பெறும். ஆடவர் சரீரத்தி

லுள்ள அக்கினியின் வலிமையானது சுண்டும் போது அதிலுள்ள மலங்களிறுகி வெயர்வையின் வழியாக வெளிப்பட்டுப் போகும். சிறிதுபாகம் சரீரத்தோடு கலந்து தேகத்தை வலுவுடையதாகச் செய்யும். மலங் கழிந்து நிர்மலமான சுக்கிலம் வெண்மை நிறத்தை யடையும். இரும்பு தாம்பிரம் முதலிய பதார்த்தங்களும் சுத்தப் பட்டு மல மொழிந்து பஸ்மமாய் வெண்ணிறம் பெற்று விளங்குவது காண்க. ஆடவர் சரீரத்தில் இரண்டாம் நிலைமையை யடைந்துள்ள உதிரம் சுண்டினால் ஒரு படி உதிரத்துக்கு அதனினும் எவ்வளவோ மிகக் குறைந்த அளவான சுக்கிலமே மிஞ்சிச் சத்து என்னப் பட்டு நிற்கும். பெண்கள் சரீரத்திலுள்ளது இரஜஸ் என்று பேர் பெற்றுச் செம்மை நிற முடையதாகும். அதற்கு இரஜோ குணமாம். இரஜோ குணத்தின் தன்மை அலைவதும் துக்கப் படுவதுதாம். சுக்கிலமும் சுரோணித மென்கிற இரஜஸும் முறையேஆடவர் மகளிர் சரீரங்களில் ஜீவநிலைமையைப் பெற்று நிற்கும். இவற்றையே ஜீவ னென்பாரு முளர். வெண்மை நிறம் சத்துவகுண மெனப்படும். ஆதலா லதனை யுடைய ஆடவர்க்குச் சரீர வுறுதியும், அறிவின் தெளிவும் உண்டாகும். பெண்களுக்கோ அதற்கு மாறாக சரீரமெலிவையும் மன வலைச்சலையும், உலக வின்பத்தில் அதிகப் பற்றுதலையும் தெளிவற்ற அறிவையும் உண்டாக்கி நிற்கும். அகப் புறக் கருவிகளையும் மென்மைத் தன்மையவாகச் செய்யும். ஆதலால் அவர்கள் சரீரம் அதிகப்பனி, வெயில், காற்று, மழை முதலியவற்றைச் சகியாது. மாதவிடாய்க்காலமும் அவர்களுக்கு ஒரு வியாதி போலவேயிடர் விளைக்கக் கூடியதாம். அது பற்றியேஅவர்களுக்கு அக்காலத்தில் மென்மையான ஆகாரமும், குறைந்த வுணவும் விதிக்கப் பட்டன. வெயில் முதலியவற்றால் தீமை நேரிடாதபடி நிழல் தரும்படியான தனி இடமும் விதிக்கப் பட்டது. அப்போது பழைய இரஜஸ் கழிதலும் புதியது ஊறுவது மாதலால் சரீரம் மெலிவடையும். கடின பதார்த்தங்களை அதிகமாக வுண்டால் சூதக வாய்வு முதலிய பல கர்ப்பாசயத்தைப் பற்றின கொடிய நோய்க ளுண்டாகும். உஷ்ண மதிகமான இடத்தில் தங்கினால் புதிதாயூறும் இரஜஸும் உருகிப் பழையதுடன் கலந்து வெளிப்பட்டு விடும். அதனாற் சரீர மெலிந்து பல வகையான வியாதிகளுக்கு இட முண்டாகும். இக்காலத்திலுள்ள பெண்களோ இவ்விதிகளுக்கு மாறாக நடந்து, புளிய மரத்தடியிலும், வேம்பு அரசுகளி னடியிலு மிருந்து வருவது வழக்கமாயிருக்கிறது. இதனாலேயே யிளம் பெண்களும் வயிற்று வலி முதலிய நோய்களாலே வருந்துவதைப் பிரத்தி யட்சமாய்க் காண்கிறோம். ஒரு சமயம் மூளையைப் பற்றிய வியாதி யுண்டாய் மதிமயக்க முண்டாக்கும். அதனைச் சங்கா தோஷம் (பேய் பிடித்தது) என்பது வழக்கம். இவை யெல்லாம் பதினெண் சித்தர்கள் செய்தருளிய வைத்திய நூல்களில் சரீர வியல் கூறு மிடத்து விளக்கப் பட்டனவே. இதனால் பெண்கள் பல ஹீனர்களாய் ஆடவ ருதவியைத் தேடத் தக்கவர்கள் எனவும், ஆடவர் களுக்குப் பெண்களுதவி வேண்டுவது அநாவசிய மெனவும், அவர் தங்களைக் காத்துக் கொண்டு தம்மைச் சேர்ந்தவர்களையும் காப்பாற்று மியல் புடையா ரெனவும் அறியத் தக்கது. கர்ப்பம் அல்லது பிரசவகாலம் நேரிடுமாயின் அப்போது பெண்கள் பிறருதவியை நாடுவது இன்றியமையாதது என்பது யாவருக்கும் நன்கு புலப்படும். இக்காரணங்கள் பற்றியே

ஆடவரைத் தலைமை பெற வைத்ததும், பெண்கள் ஆடவர்களுக்கு அடங்கியேவாழ வேண்டு மென்று விதித்ததுமா மென்க. இதுகாறும் கூறிப் போந்தவதனுற் பசு பட்சிகளைப் போல இன்ப துன்பானு பவங்களில் ஆடவர் மகளிரிவரு மொரு தன்மையராய்க் காணப்படினும் சரீர வியற்கையால் மாறு பட்டவர்களேயா மென்க. ஆகவே பெண்கள் ஆடவர்களுக்கு எப்போது மடங்கிவாழ வேண்டியவர்களே யாவர் என்பது திண்ணமாம்.

(தொடரும்.)

சிவானந்தசாகர யோகீஸ்வரர்.

ஹிதவாதி அல்லது ஓர் வியாசம்

நமது அன்பார்ந்த சந்தாநேயர்களும், ஏனையோர்களும் கீழ்காணும் விஷயத்தைச் சற்றுக் கவனிக்குமாறு வேண்டுகிறோம்.

நமது சந்தாநேயரில் ஒரு நண்பர் ஹிதவாதி என்று கையொப்பமிட்டு ஒருவியாச மனுப்பி யிருக்கிறுர். அவ்வியாசம் முழுமையும் இங்கு வரைவது அனுவசிய மாதலால், அதிலடங்கியுள்ள விஷயத்தை மட்டும் சுருக்கமா யறிவிக்கிறோம். "நமது நாட்டில் பெற்றோர்கள் தம்மக்களுக்குக் கலியாணம் செய்வதில் பெண்ணுக்கு அப்புருடனை மணம்புரியப் பிரியமா என்பதையும், புருடனுக்கு அப்பெண்ணை மணம்புரியப்பிரியமா என்பதையும் அறியாமலே தங்கள் பிரியப்படி மணம் செய்து விடுவதால் பின்னுல் அவர்கள் உலக சுகம் அடியோடு கடைசி வரையில் கெட்டுப் போகிறது" என்றும் "அதனுல் அவர்கள் பிரியத்தை யனுசரிக்காமல் தாய் தந்தையர் தங்கள் பிரியப்படிமணம் செய்யலாகாது" என்றும் அவர்வரைவதோடு, தமதுகடிதத்தில் "வியாசத்தின் முக்கியநோக்கம் வதூவரர்களின்சம்மதத்தின் மேல் விவாகம் நடத்த வேண்டுமே தவிர, பெற்றோர்களின் இஷ்டப்படி பலவந்தத்தால் முடிக்கலாகா தென்பதே" என்று கூறுகிறுர்.

நேயர்களே! இத்தகைய அபிப்பிராய முடையோர் இன்னும் சிலரும் இருக்கலாகும். சிலர் இப்படிச் செய்வதே நமது நாட்டிற்கு வேண்டிய நாகரிகச் சீர்திருத்தம் என்று கருதுகிறுர்கள். ஆனுல் நமது முன்னேர்களின் பெருமை யிப்போது பல வழிகளில் வெளி வந்துகொண் டிருப்பதால் அத்தகையோர்களின் எண்ணிக்கை வரவரக் குறைந்து கொண்டே வருகிறது. ஆயினும் முன் கூறியபடி இத்தகைய அபிப்பிராய முடையோர் இன்னும் சிலர் உளரே. ஆதலின் இதைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் கூற வேண்டியது அவசிய மென்று கருதுகிறோம்.

இப்போது நமது நாட்டில் மணம் முடித்துக் கொள்ளும் பெண்களும் பிள்ளைகளும் இவ்வளவு வயதுக்கு மேற் பட்டவர்களா யிருக்க வேண்டு மென்ற ஒரு நிபந்தனை கிடையாது. பதினுறு வயதிற்கும் குறைந்த வயதுடையவர்கள் பலருக்குக் கலியாணம் நடக்கிறது. முதன் முறை மணம் செய்து கொள்ளும் ஆண்பாலரில் பெரும் பாலார் 18-முதல் 25 வயதுடையவர்களே. குறைந்தது 21, 22 வயது வரையில் கலியாணத்தின் பொறுப்பு இன்ன தென்பதே அனேகர்க்குத் தெரியாது. நமது

நாட்டில் கலியாண ஏற்பாடு மத சம்பந்தமும் ஆன்மார்த்த நோக்கமும் உடையது.

மேற்கண்ட வாலிப வயதுடைய பெண்ணும் பிள்ளையும் ஒருவர்மே லொருவர் பிரியங் கொண்டால் கலியாணம் செய்து விட வேண்டும் என்பது நமது ஹிதவாதியாரின் அபிப்பிராயம். இருக்கட்டும் — இவர்கள் எந்த விஷயத்தை நாடி ஒருவர் மேல் ஒருவர் பிரியங் கொள்வது? மிருக இச்சையும், பார்வைக்குப் புலப்படும் உருவத்தாலுண்டாகும் மனோ மயக்கமுமே இவர்களுக்குப் பரஸ்பரப் பிரியத்தை யுண்டாக்க வேண்டும். பெற்றோர் தன்மை, குல கோத்திரம் முதலிய வற்றை யறியவோ இவர்கட்கு அனுபவம் இல்லை. ஒருவர்க் கொருவர்குணம், யோக்கியதை, நடக்கை, அன்பின் அளவு முதலிய வற்றை யறிந்து அதன் மேல் பிரியங் கொள்வதெனின், அவற்றையறியக் கொஞ்ச காலம் இருவரும் சினேகிதர் போல்பழகவேண்டும். அப்படித்தான் செய்யவேண்டு மெனின் மேல் நாட்டார் ஆச்சாரத்தைப் பின் பற்ற வேண்டும் என்று ஒரே மட்டாய்க் கூறி விடலாம். அந்தோ! அந்த ஏற்பாட்டால் நேரிடும் துன்பங்களும், துயரங்களும், கற்பழிவுகளும் பிரத்தி யட்சமாய்த் தெரிந்த விஷயமே. நமது நாட்டின் க்ஷேமத்தைக் கோரும் எவரும் அத்தகைய ஆசாரத்தை நம்மவர் கைக்கொள்ள வேண்டு மெனக் கனவிலுங் கருதார். மேல் நாட்டாருடைய நோக்கங்கள் முயற்சிகள் அனைத்தும் உலக போக நுகர்ச்சியைச் சேர்ந்தவைகளே யாகும். ஆன்மார்த்த விஷயத்தில் பாடுபட விசாலமான துறைகளை அவர்கள் உணர்ந்திருக்க வில்லை. அங்கு நடக்கும் பகிரங்கமான பிரசங்கங்களில் ஆயிரத்தில் ஒன்று இரண்டு கூட ஆன் மார்த்த விஷயத்தைப்பற்றி யவைகளாய் இரா.

நேயர்களே! சற்றுச் சிந்தித்துநோக்கினால் நம் முன்னோர் எல்லாவிஷயங்களையும் தீர்க்கா லோசனை செய்தே ஆசாரங்களை ஏற்படுத்தி யிருக்கிறார்க ளென்றும், கலியாண விஷயத்தில் அவர்கள் செய்திருக்கும் ஏற்பாடுகள்நமது சந்ததியார்கள்இருமைப்பயன்களையும் பெறமிக்க அனுகூலமானவையென்றும், இணை யற்றவை யென்றும் நன்கு விளங்கும்.

பிரியம் என்ற விஷயத்தில் பெண்கள் ஆடவனது அழகொன்றையே கவனிப்பார்கள். இல்லற தருமம் நடத்துவ தென்பது அத்தகைய இழிவான தாழ்ந்த நோக்கங்களைக் கொண்டு ஏற்படுத்தப்பட்ட தல்ல. ஆகையால் முக்கியமாய்ப் பெண்கள் பெற்றோர் நியமிக்கும் ஒருவனையே புருடனை—அவனையே தெய்வத்திற்குச் சமதையாக—மதிக்க வேண்டும் என்று விதித்திருக்கிறார்கள். அதுவே நமது வேதக் கட்டளை யென்று நமது பெண்கள் நம்பி அதற்குக் கீழ்ப்படிந்து நடக்கிறார்கள். அவன் மூடமோ, நொண்டியோ, குரூபியோ, எப்படியோ, — பெற்றோர் அவன் யோக்கியதை குணம் முதலியவற்றை யாராய்ந் தறிந்தே ஏற்பாடு செய்வதால் அவன் ஒருவனே நாம் மடியு மட்டும் இச்சென்மத்தில் நமக்குக் கணவன் என்று கருதி விடுகிறார்கள். இதனால் நமது பெண்மக்கள் கேவலமான உலக இச்சைகளில் நாட்ட மில்லாதவர்களாய், நாற்பதைம்பது அறுபது வயதான பின்னும் காண்போர்க்கு நாம் யௌவன மாதர் போல் தோன்ற வேண்டு மென விரும்பி, தங்கள் தேகங்களுக்கு வேட தாரிகள் போல்

அலங்காரம் செய்வது முதலிய அற்ப இச்சைகளைக் கனவிலும் கருதாதவர்களாய்க் கற்பரசிகளென இவ்வுலகில் புகழும் துதியும் பெற்று மறுமையில் மேலான பதவியை யடையும் நெறியில் ஒழுகுகிறார்கள். நமது நாட்டுச் சதி புருடர்கள், மனைவி இவரே நமது பிராண நாதர் என்று மனதிற் கொண்ட உறுதியான தீர்மானத்தாலும், புருடன் இவளே நாம் அக்கினி சாக்ஷியாய் மணம் புரிந்த உயிர்த் துணைவி யென்று மனதிற்கொண்ட உறுதியான கொள்கையாலும், பரஸ்பர அன்புடையவர்களாய் வாழ்கிறார்களேயன்றி, ஒருவர் அழகைக் கண்டு ஒருவர்க் குண்டான ஆசையாலல்ல வென்பதைப் பிரத்தியட்சமாய்க் காணலாம். ஏகதேசத்தில் எங்கோ ஒவ்வொரு அறிவிலி இதற்கு மாறாய் நடப்பது கொண்டே நம் முன்னோர் கொள்கை தவறான தாகாது. மணம் செய்துக்கொள்ளப் போகிறவர்களில் எக் காரணத்தாலேனும் ஒருவர்மே லொருவர்க்குப் பூரண வெறுப்புண்டாகி மணம் புரியப் பிரியமில்லை யென்பார்க ளாயின் அத்தகைய விஷயத்தில் பெற்றோர் பலவந்தம் செய்யாமல் ஜாக்கிரதையாய்க் கவனிக்க வேண்டியது அவசிய மென்றே விதி யிருக்கிறது. மற்றபடி, இதுகாறும் நடந்து வருவது போல் பெற்றோரும் ஆன்றோரும் பார்த்துத் தீர ஆராய்ந்து மணம் செய்யும் ஏற்பாடே சிறந்த தென்பதில் நாம் சற்றும் ஐயம் கொள்ளாது நடந்தாலே நமது சந்ததியார் க்ஷேம முறுவார்கள் என்பது நிச்சயம்.

ஓம் தத்சத் **பத்திரிகாசிரியர்.**

தாய் பக்தி

ஓர் கடிதம்

பாஸ்ரா,
22—12—19.

அன்னியநாடான இந்நாட்டில் அகமகிழச்செய்வோர் அகப்படுவது அபூர்வமாயிற்றே என்று இவ்வளவு காலமாக விசனமுற்றிருந்தேன். அவ்விசனமானது நம் ஆனந்தனைப்பெற்ற அன்றே ஆதித்தனைக்கண்ட பனி போல விலகியது. மேலும், நம் மானந்தனில் வெளிவரவேண்டுமாய் விரும்பும் ஓர் விஷயமு முளது, அதை அடியில் வரைந்துளேன். அவ்விஷயம் ஓர் நீதி புகட்டும் நன்மொழி யானமைபற்றி அதை நம் ஆனந்தன் வாயிலாக எம் போன்ற பலருமறிந்து நலம் பெற வேணுமாய்க் கோருகிறேன்.

"கடந்த ஞாயிற்றுக் கிழமை (21-12-19) தினம், யானும் என் நண்பரில் சிலரும், விடு முறைநாளைக் கழிப்பதற்காக, சமீபத்திலுள்ள ஓர் குக்கிராமத்திற்குச் சென்றோம். வழியில் யாங்கள்கண்டு களிப்புற்ற ஓர் சத்விஷயத்தை ஈண்டு சிறிதுரைப்பேன். இந்நாடோ அரபியர் என்ற ஜாதியார் வாழும் நாடென்பதும் அவர்கள் ஓர்வித முரட்டு ஜாதியார் என்பதும் சகலரு மறிந்தவிஷயமே. சுமார் நாற்பது வயதுள்ள புருஷன் ஒருவன், ஏறக்குறைய எண்பது வயதுள்ள ஓர் மூதாட்டியைத் தன் தோளின்பேரில் தூக்கிக்கொண்டு பக்கத்து கிராமம் ஒன்றுக்குச் சென்றுகொண் டிருந்தான். அவனை விசாரித்த போது அவன், தான் தூக்கிச் செல்வது தன்னுடைய கண்ணிழந்த தாய் என்றும், அவளை வாகனத்தில் ஏற்றிச் செல்லத் தன்

னிடம் போதுமான பொருளில்லையென்றும் புகன்றான். நேயர்களே, இத்தகைய மூரட்டுஜாதியாரும் தங்களை ஈன்ற தாயிடம் வைத்திருக்கும் பக்தி நன்கு கவனிக்கத்தக்கது. அந்தோ, நம்மவர்களில் பலர், ஈன்ற தந்தை தாயரை, மனம் நோகக்கடிந்தும், துன் புறுத்தியும் வருகின்றனர். இத்தகைய உதாரணங்களைக் கவனித்தாவது புத்தி கற்றுக்கொள்ளார்களா என்று பெரிதும் வருந்துகிறேன். இப்படிக்கு,

ஆர். இராமசாமிபிள்ளை, பாஸ்ரா.

ஓர் முக்கிய எச்சரிக்கை.

நாம் இப்போது கூறப்புகும் விஷயத்தைப் பற்றி முன்னமே இரண்டொரு முறை நம் சஞ்சிகையில் கூறி யிருக்கிறோம். ஆயினும் அத்தகைய விஷயத்தை மறுபடி மறுபடி கூற வேண்டியதாகவே யிருக்கிறது. ஏனெனில் நம்மவர்கள் எதையும் மேல் போக்காய் வாசித்து விடுகிறார்களே யன்றி "அந்தோ இதிற்கூறியபடி இவ்வழக்கம் தீமையை யுண்டாக்குகிறதே, இதை நாம் உடனே யொழித்து விட வேண்டும்" என்று ஊக்கத்துடன் அக்காரியத்தைச் செய்கிறார்களில்லை. இது மட்டுமல்ல. அந்தச் சமயத்தில் மட்டும் "இனி யப்படிச் செய்யக் கூடாது. கண்டிதமாய் இந்த வழக்கத்தை நிறுத்திவிட வேண்டும்" என்று மசான வைராக்கியம் பேசி, மறு நிமிடமே அந்த விஷயத்தை யடியோடு மறந்துவிடுகிறார்கள். ஒரு மேல் நாட்டு உபாத்தியாயர் ஒரு விடத்தில் நம்மவர்கள் முன் பிரசங்கம் செய்தபோது, "இந்துக்களாகிய நீங்கள் மேடைமேல் நின்று பேச மட்டுமே வல்லவர்களன்றி பேசுகிறபடி நீங்களே நடக்க மாட்டீர்கள். பி.எ., யல்.டி., பரீக்ஷையில் தேரிய————அய்யங்கார் என்ற ஒருவர் கூடனுடைய உதவி உபாத்தியாயராக இருந்தார். அவர் ஒருநாள் பிராம்மணர்கள் வரதட்சணை கொடுப்பது கொடிய வழக்கம், அப்படிக் கொடுக்க பெண் வீட்டார்கள் கட்டுப்பாடாய் மறுத்து விட வேண்டும்......" என்று பிரமாதமாய்ப் பேசினார். அடுத்த வாரம் அவரே தன் புத்திரிக்குப் பெருந்தொகை கடன் வாங்கி வரதட்சணையாகக் கொடுத்துக் கலியாணம் செய்தார்" என்று கூறினார்.

நேயர்களே! அந்த மேல் நாட்டு உபாத்தியாயர் கூறியதில் எள்ளளவேனும் ஐயமுண்டோ? இல்லை யில்லை.

நம்மவர்களில் அனேகர் இப்போது மேல் நாட்டாருடைய ஆசாரங்களைப் பின்பற்றுவதில் மிக்க ஆவலுடையவர்களா யிருக்கிறார்கள். அந்தோ எந்த ஆசாரங்களைப் பின்பற்றினால் நாம் க்ஷேமமடையலாம் என்பதை மட்டும் அறிந்து நடக்கிறவர்களாக இல்லை. தாய் நாட்டின் க்ஷேமத்திற்கு இடையூ றுண்டாக்கும் விஷயத்தை யுடனே யாவரும் ஒருமனப்பட்டுத் தடுக்க ஊக்கங் கொள்வதிலும், தாய் நாட்டின் க்ஷேமத்திற்காக அல்லது தாய் நாட்டின் ஆபத்தை நீக்க ஒரு காரியம் செய்ய வேண்டிய அவசியம் நேர்ந்த போது, தங்களுக்குள் இருக்கும் கட்சி பேதங்கள் சச்சரவுகள் யாவற்றையும் ஒரு மூட்டை கட்டி மண்ணில் புதைத்து மறைத்து விட்டு, யாவ

ரும் ஒரு மனப்பட்டு ஒற்றுமையாய் ஒரே நாட்டம் வைத்து அக்காரியத்திற்கு வேண்டிய விஷயங்களைக் கவனித்துச் செய்வதிலும், மேல் நாட்டார்கள் புத்தியை நமது நாட்டார் பின்பற்றுவார்களாயின் நம் நாடு இச்சீர்கேடான நிலையிலிராது. நம் சகோதரர்களாகிய நமது நாட்டுப் பொது ஜனங்களின் க்ஷேமத்தை யெள்ளளவும் கருதாமல், நம்வரையில் காசு கிடைத்தால் போதும் என்றெண்ணி நமது ஜனங்களுக்கே இடையூறுண்டாக்கும் காரியத்தைச் செய்யும் குணமுடையவர்களாகவே நம்மவர்கள் இன்னுமிருக்கிறார்கள்.

சில காரணங்களால், அன்னியமதம் போதிக்கப்படும் பாடசாலைகளுக்கு நமது மக்களை யனுப்பலாகா தென்று நாம் முன்பொரு முறை எழுதிய போது, டிராம் வண்டியில் நம்மைச் சந்தித்த நண்பரொருவர் “தாங்கள் வரைந்தது மிக்க நல்லதும் அவசியமானதுமான விஷயம். அந்தக் கொடிய வழக்கத்தால் அனேகம் தீங்குகளுண்டாகின்றன” என்று மிகவும் புகழ்ந்து பேசினார். இப்போது அவர் புத்திரனே அத்தகைய பாடசாலையில் வாசிக்கக் கண்டு நாம் அவரைக் கேட்டதற்கு “என்ன செய்வது! அதுதான் கிட்டவிருக்கும் பாடசாலை” என்றார். அந்தோ இவர் கூறியது நடைக்கஞ்சி சிற்றப்பன் வீட்டில் பெண் கொண்ட கதைபோலிருக்கிறது. பொடிச் சூட்டுக் கஞ்சி நெருப்பில் குதிப்பாருண்டோ?

அந்தோ அல்ப கஷ்டத்திற்குப் பயந்து நம் சந்ததியாருக்கே பெருங் கேடு விளைக்கும் காரியத்தைச் செய்வது அறிவாளிகளுக் கழகாகுமோ? நமக்கு வரும் சொல்பவரும்படிக் கிச்சைவைத்து நம் நாட்டாரில் பலருக்குக் கஷ்டத்தை விளைவிக்கத் தக்க காரியத்தைச் செய்யலாகுமோ? பொது நலத்திற்காகச் சுயநலத்திற்கு நேரிடும் சொல்ப நஷ்டத்திற்கேனும் உடன்படாத ஒருவன் தேசாபிமானி யென்ற பெயர்க்குரியவனாவானோ? அதற்கு மாறாகத் தாய் நாட்டிற்குத் துரோகம் செய்தவனே யாவான். சுயநலத் தியாகத்திற்குச் சந்தோஷமாய் உடன்பட்டு ஒவ்வொருவரும் பொது நலத்திற்குப் பாடுபட்டா லன்றி நம் தாய்நாடு முன்னேற்ற மடையாதென்பதை நாம் மறவாதிருக்கவேண்டும். எல்லாம் வல்ல கருணாநிதி அதற்கு வேண்டிய நல்லறிவையும் ஊக்கத்தையும் நமக்களித்து அருள் புரிய வேண்டுமாய்ப் பிரார்த்திப்போமாக.

ஓம் தத் ஸத்.

ஆனந்த போதினி.

வைத்தியக் குறிப்பு

(235-ம் பக்கத்தொடர்ச்சி)

சுரம் என்னும் கொடிய வியாதியானது தற்சமயம் இந்தியாமுழுவதிலும் பரவியிருக்கின்றது. அதில் பற்பல விதமான சுரங்கள் பற்பல காரணங்களால் உண்டானாலும் சரீரத்தை நாசமடையுமாறு செய்விக்கக்கூடிய சுரங்கள் சிலவிருக்கின்றன. அவை யாவை யெனில் (இன்புளுயன்ஸா) வென்னும் ஓர்வித அம்மைக்காய்ச்சலும், (டைபாயிட்) என்னும் சந்நிபாத சுரமும், (டைபஸ்) என்னும்அதிசாரசந்நிபாதசுரமும், (நிமோனியா) வென்

னும் கபவாத சுரமும், பிளேக்என்னும்சுரங்களும், (கன்சம்ப்ஷன்)என்னும் க்ஷீணசுரமும், ஆகிய இத்தகைய சுரங்களினுலேயே உயிர்கள் பல மாளு கின்றன. ஆனுல் இதுவரையில் இத்தகைய சுரங்களுக்குத் தக்கபரிகாரங் கள் கண்டுபிடிக்கப்பட்டதாய்த் தெரியவில்லை. ஆனுல் பலரால் சிகிச்சை செய்து குணமடைந்துள்ளவர்கள் பலரிருக்கின்ருர்களே என்ருல் உண் மையே. சிகிச்சை செய்யும் முறையானது எப்படியிருக்கின்றது என்று யோசிக்குமிடத்து, சாதாரணமாய் மேற்குறித்த சுரங்களில் பலவற்றிற்கு இத்தனை நாள் என்று ஒரு கெடுவுண்டு. அவையாவை யெனில் (டபில் நிமோனியா) என்னும் கபவாத சுரத்திற்கு, 14 நாள் கெடுவு என்று ஒரு தீர்மானம் உண்டு. அவ்வாறே சந்நிபாத சுரத்திற்கு 21 நாள் கெடுவு என் று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அத்தகைய சுரங்களை மருந்தின் உப யோகத்தால் குறித்த நாட்களுக்குள் நிவர்த்தி செய்ய முடியாவிட்டாலும் அந்நோயால் வேறு வித கெடுதல்கள் உண்டாகா வண்ணம் பார்த்துக் கொள்வதால் குறைவடைவது வாஸ்தவமே. ஆயினும் மேற்சொன்னவியாதி யைச் சொஸ்தம் செய்யக்கூடிய வைத்தியர்கள் உண்டென்று கூறலாம். எப் படியெனில் வியாதியின் தன்மை யின்னதென்று உணராமல் செய்யும் சிகிச்சைகளால் கெடுதி விளைவது சகஜமே யானதால், அத்தகைய கெடுதி விளையாமல் வியாதியைக் கண்டுபிடிக்கும் நிபுணர்களே அப்படிப்பட்டவர் கள். அத்தகையவர்களே தற்காலம் மேன்மையாகப் பாவிக்கப்படுகிருர்கள்.

அந்த நாள் பரியந்தம் தவருன மருந்துகளாலும் ஆகாத பண்டங் களைப் புசிப்பதாலும் வேறு வியாதிகள் உண்டாகாவண்ணம் ஜாக்கிரதை யெடுத்துக்கொள்வதோடு, அஜீரணம் உண்டாகாமலும், மலஜலம் கிரம மாய் இருக்கும் வண்ணமாகவும், குரல்வளை முதலியவை சரியான நிலை மையி லிருக்கும்படி யாகவும் கவனித்து வந்தால் குறித்த நாட்கள் கழிந் ததே சுரம் நீங்கிச் சுகமுண்டாகும்.

அவ்வாறு ஔஷதத்தால் நீங்கிவிட்டதென்று சொல்வதற்கிடமில் லாத சில சுரங்களிருக்கின்றன.

டாக்டர். மே. மாசிலாமணி முதலியார்.

கற்கோட்டை—நாவல்

(279—ம் பக்கத் தொடர்ச்சி)

29-வது அத்தியாயம்.

கவசம், முனிவிங் இருக்கும் அறைக்குள் சென்றதும் அவனுக்கு மரி யாதையோடு வந்தனமளித்தான். ஆனுல் இராணியின் உடுப்பிற்காக அப் படி மரியாதை செய்வதாகவும், மற்றபடி தான் அந்தஸ்தில் அவனுக்குக் குறைந்தவ னல்லவென்றும் அவன் உணருமாறு நடந்துகொண்டான். அவ் வாறு வந்தனமளித்ததும்,

"இச்சமயத்தில் என் பெரிய தந்தை இங்கில்லாததற்கு மிக்க விசனப்படுகிறேன். இந்நேரம் இங்கேதான் இருந்தார். திடீரென்று எங்கு சென்ருரோ தெரியவில்லை. ஆலசியம் செய்யத்தகாத காரியங்களா

யிருந்தால், அச்சமயங்களில் நான் அவருடைய பிரதிநிதியா யிருந்து அக்காரியங்களை நிறைவேற்றுவது வழக்கம்'' என்றான்.

முனிஸிங்.—ஓ! அப்படியாயின் தாங்கள் அவர் சகோதரர் புத்திரராக்கும்.

கவசம்.—“ஆம். தாங்கள் எப்போது போசனமருந்தியதோ......'' என்பதற்குள்,

முனிஸிங்.—மிக்க வந்தனம், வந்த காரியத்தை முடித்துக்கொண்ட பின்பே மற்ற விஷயங்களைப்பற்றி கவனிக்கவேண்டும்.

கவசம்.—அப்படியாயின் என்னு லாகவேண்டிய காரியத்தைத் தெரிவித்தால் உடனேசெய்ய ஆயத்தமா யிருக்கிறேன்.

முனிஸிங்.—இந்த வீட்டிற்குள் கண்ணபிரான் பிரபு, ஸர்தார் குணலிங்கம் பிரபு, விக்ரமநாதம் பிரபு என மூன்று ஆசாமிக ளிருக்கிறார்கள்.......

கவசம்.—ஆம் முன்னமே அம்மூவர் மேலும் கண்ணோக்கம் வைக்கும்படி ஆள் வைத்துவிட் டிருக்கிறேன்.

முனி.—பேஷ், நல்லவேலை செய்தாய்.

கவசம்.—எப்போது என் பெரிய தந்தையை இரகசியமாய்க் காணவேண்டு மென்றீரோ அப்போதே யெனக்குச் சந்தேக முதித்தது. அதோடு தாங்கள் ஸர்தாரிடம் அனுப்பிய அந்த ஆள், தாங்கள் கூறிய இரண்டொரு வார்த்தைகளை யென்னிடம் இரகசியமாய்க் கூறினான். எனக்கு விபரம் ஒன்றும் தெரியாதேனும் அவர்கள்மேல்தான் மறுபடி எதோ குற்றம் சாட்டப்பட் டிருக்கவேண்டு மென்று ஊகித்துக்கொண்டேன். நான் அப்படி முன் யோசனையாய்ச் செய்தது இராணிக்கு எங்கள் இராஜ விசுவாசத்தைக் காட்டவும், இராணியின் உத்தியோகஸ்தராகிய தங்களுக்குரிய மரியாதையைச் செய்யவும், என் பெரிய தந்தை செய்யவேண்டிய கடமையை நிறைவேற்றவுமே யாகும்.

முனி.—நீர் இப்படி மொழிந்ததைப்பற்றி நான் மிக்க சந்தோஷ மடைகிறேன். உமது நாமதேயம்?

கவசம்.—பொன்னுசாமி.

முனி.—சரி, இப்போது நாம் அவர்கள் மூவர்களையும் கைது செய்ய வேண்டும்.

கவசம்.—அதற்கென்ன தடை. அப்படியே செய்கிறது.

முனி.—அவர்களிடம் இரண்டே ஆட்கள் இருக்கிறார்களாம்.

கவசம்.—அப்படியாயின் அவர்கள் ஐந்துபேர் இருக்கிறார்கள். எப்படியும் துணிகரமாய் எதிர்த்து நிற்பார்கள்.

முனி.—அதற்காகவே நானும் யோசிப்பது. இப்போது இங்கே உமது வசம் எத்தனைபே ரிருக்கிறார்கள்.

கவசம்.—வீட்டிலிருக்கும் சமையற்காரன் பரிசாரகன் முதலியவர்கள் உதவவே மாட்டார்கள். மேலும் அவர்களை யெல்லாம் நம்பலாகாது. நான் இருக்கவே யிருக்கிறேன். தாங்கள் சந்தித்த வாலிபன் ஒருவன் இருக்கிறான். அவனைத்தான் இப்போது அவர்கள்மேல் பார்வையாய் இருக்க வைத்திருக்கிறேன்.

முனி.—சரி, நாம் ஆறுபேர் இருக்கிறோம். ஆனால் அவர்கள் ஐவர் இருப்பதால் கடுமையான சண்டை நேரிடும். ஒரு சமயம் அந்தப் பிரபுக்களில் ஒருவர் இருவர் கொல்லப்படக் கூடும்.

கவசம்.—அப்படியாயின் நான் எங்கள் வீரர்களில் சிலரை யழைத்து வந்தாலென்ன? வீட்டையே சூழ்ந்து கொள்ளலாம். அப்போது அவர்களும் தப்பமுடியாது, எதிர்த்து நிற்கவும் முடியாது.

முனி.—பேஷ்! அதேதான் நானும் சிந்தித்தது.

கவசம்.—ஒரு வார்த்தை, இவர்களிடம் அக்கணையாழி எப்படி வந்தது?

முனி.—களவாடப்பட்டது. அரியநாயகி என்பவள் அதைக் களவாடிக் கொண்டுவந்து இப் பிரபுக்களிடம் கொடுத்துவிட்டாள். ஆனால் இந்த இரண்டு பிரபுக்களும் சீக்கிரம் சிறைச்சாலையி லிருக்கும் தங்கள் தமையனோடு போய்ச் சேர்வார்கள்.

கவசம்.—"என்ன? திரவிய சிங்கம் பிரபுவா?" என்றான்.

அதன்மேல் முனிஸிங் திரவிய சிங்கம் பிரபு மறுபடி கற்கோட்டையில் இரகசிய அறையில் பிடிக்கப்பட்டதைக் கூறினான். அதன் பிறகு, கவசம் ஒவ்வொரு கேள்வியாய்க் கேட்டுக் கேட்டு, அரியநாயகி அரண்மனைக்குச் சென்றது முதல் நாம் முன் கூறியபடி அங்கு நடந்த சங்கதிகள் யாவையும் தெரிந்துக்கொண்டான். திரவியசிங்கம் பிரபு பிடிப்பட்டபோது அவர் முனிஸிங்கோடு கூட வந்த ஆளைக் கொன்றது தானே என்று ஒப்புக்கொண்டதால், கொலைக் குற்றம் சாட்டப்பட்ட செல்வராயர் விடுதலை செய்யப்பட்டா ரென்றும், அரியநாயகி பெரும்பாலும் தங்கம்மாளோடு சிறையில் வைக்கப்படுவா ளென்றும் முனிஸிங் கூறியதோடு காப்டென் தினகரன் கைது செய்யப்பட்டதையும் கூறினான்.

கவசம்.—"ஆ! சுந்தரநாயகம் பிரபுவின் புத்திரரா? அப்பிரபு கண்ணபிரான் பிரபுவின் விசாரணை காலத்தில் அவர் தண்டனை யடைவதற்காக மிக்க சிரத்தை யெடுத்துக் கொண்டார்" என்றான்.

முனிஸிங்.—"அவர் மிக்க இராஜவிசுவாச முடையவர். இனி உன் ஆட்களை அழைத்து வரலாமே" என்றான்.

கவசம் முனிஸிங்கிட மிருந்து கிரகிக்கவேண்டிய சமாசாரம் இன்னும் ஒன்றுமில்லையென் றுணர்ந்தவனாய், "என் ஆட்கள் நகர அதிகாரி வீட்டில் போஜனம் செய்துகொண் டிருக்கிறார்கள். இதோ கால்மணி நேரத்தில் அழைத்துவந்து விடுகிறேன். இதற்கெல்லாம் நானே நேரில் செல்லவேண்டும்; இன்னொருவரை நம்பமாட்டேன். இதற்கிடையில்........." என்றான்.

முனி.—இதற்கிடையில் நான் இங்கேயே யிருக்கிறேன். நான் வந்திருப்பது அவர்களுக்குக் கொஞ்சம் தெரிந்தால்.........

கவசம்.—ஆ! காரியமே கெட்டுவிடும். நீர் சமயம் வருமட்டும் வெளியில் தலையே காட்டலாகாது. உமது ஆட்களைப்பற்றி என்ன ஏற்பாடு?

முனி.—என் ஆட்கள் அச்சமயம் கூட இருக்கவேண்டும்.

கவசம்.—அப்படியானால் நான் திரும்பிவரும்போது என் கூடவே அழைத்து வந்து விடலாம்.

முனி.—அவசியம் அப்படித்தான் செய்யவேண்டும்.

கவசம்.—கூடவே அழைத்து வந்து விடுகிறேன். அல்லது சமயோசிதப் படி செய்து, அந்த வேளைக்கு அவர்கள் இங்குவந்து சேரும்படி செய்துவிடுகிறேன்.

முனி.—ஆம், ஆம். சமயோசிதப்படி.

கவசம் உடனே எழுந்து புறப்பட்டதும், வாசற்படி யருகில் சென்ற வன், ஏதோ நினைத்துக்கொண்டவன் போல் சட்டென்று திரும்பி முனி லிங் அருகிற்சென்று "ஆ! உங்கள் ஆட்கள் முன்பின் னறியா என் வார்த்தையைக் கேட்பார்களா? ஏதாவது ஒரு அடையாளம்..." என்பதற் குள், முனிலிங் "ஆம், ஆம். நன்றாய் நினைப்பூட்டினை" என்று கூறிக் கொண்டே தன் ஜேபியி லிருந்த சிறு புத்தகத்தை யெடுத்து அதிலொரு துண்டு கடிதம் கிழித்து, அதில் "இச்சீட்டு கொண்டு வருபவர் இடும் கட் டளைப்படித் தவறாது நடந்துகொள்ளுங்கள். பூரண ஜயமே யுண்டாகும்" என்று எழுதிக் கையொப்பமிட்டு கவசத்தினிடமளித்து, "இது போதும்" என்றான்.

இப்போது மற்றொரு அறையிலிருந்த கேடையத்தைச் சற்று கவனிப் போம். ஸர்தார் வீட்டிற் குள்ளாகவே எங்கோ விருக்கிறா ரென்று அவனுக் குத் தெரியும். அவர் திடீரென்று வந்து முனிலிங்கைப் பார்த்துவிட்டால் காரியமே அடியோடு கெட்டுப் பெருமோசமாய் விடும். ஆகையால் அவன் தன் அறையின் கதவைப் பாக்கத் திறந்து வைத்து, மிக்க உன்னிப்பாய்த் தாழ்வார வழியைப் பார்த்தபடி கவனித்துக்கொண் டிருக்கிறான். சுமார் பத்து நிமிடங்கள் கழிந்தபின் வேறொரு பக்கமிருந்த அறையின் கதவு திறக்கப்பட்டதும், ஸர்தார் தன் அறையை நோக்கி வருவதைக் கண் டான்.

ஸர்தார் அறைக்குள், வந்ததும் "திருப்தியாய்ப் போஜனம் செய்தீர் களா? எங்கே உன் கூட்டாளி?" என்றார்.

கேடையம்.—அங்கே தான் வந்தான்: தாங்கள் காண வில்லையோ? கடற் கரையிலிருந்துதானே வருகிறீர்கள்?

ஸர்தார்.—"ஏன் கடற்கரை? என்ன சங்கதி...?"

கேடையம்.—"சற்று முன்னே ஒரு வீரன் வந்து கடலோரம் வட கோடி யில் அக் கள்ளக் கப்பல் புலப்படுகிற தென்று கூறித் தங்களைக் கேட் டான். நான் கவசத்தைத் தங்களிட மனுப்பினேன். அவன், வேலைக் காரன் எவனோ தாங்கள் வெளியில் சென்றதாய்க் கூறியதாகவும், தானும்போய் பார்த்துவிட்டு வருவதாகவும் என்னிடம் வந்து கூறி விட்டுச் சென்றான்" என்றான்.

ஸர்தார்.—அடடா! எந்த முட்டாள் அப்படிக் கூறினான்? தெரியாமற் கூறிவிட்டான். கள்ளக் கப்பல் வந்திருப்பதாகவா சொன்னான்?

கேடையம்.—ஆம்.

(தொடரும்.)

ஆரணி-குப்புசாமி முதலியார்.

"ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்

சித்தார்த்திஸு பங்குனிமீ—சாலிவாகனம் 1841-கலியுகாதி 5020

பசலி 1328-29—கோல்லம் 1094-95 - ஹிஜரி-1338-

இங்கிலீஷ் 1920-ம்ஸு மார்ச்சுமீ—எப்பிரல்மீ

ர	கே		
பு-சு	27வ மீ-பு 25வ மீ-சு		குரு
			சனி
		ரா செ	

பங்குனிமீ	மார்ச்சுமீ	வாரம்	திதி.	நக்ஷத்திரம்.	யோகம்.	விசேஷங்கள்.
1	13	ச	அ-15-10	மூல-52-4	சி-60	
2	14	ஞா	நவ-19-59	பூரா-57-52	சி-58 அ	
3	15	தி	தச-24-6	உத்-60-0	ம-60	
4	16	செ	ஏ-26-45	உத்-2-48	சித்த-60	
5	17	பு	து-29-14	திரு-6-44	சி-7 ம	
6	18	வி	திர-29-58	அவி-9-19	சித்-9-ம	
7	19	வெ	ச-29-41	சத-10-43	சித்த-60	
8	20	ச	●-27-32	பூர-10-54	ம-11 சி	
9	21	ஞா	பிர-24-38	உத்-9-47	அ-60	தெலுங்கு வருஷபிரப்பு
10	22	தி	து-20-47	ரே-[illegible]-2	சித்-60	நவச்ரகசாந்தி செய்ய
11	23	செ	தி-16-10	அசு-5-24	சித்த-60	சூளையில் நெருப்பிட
12	24	பு	ச-10-56	*கிரு-56-8	சித்த-60	கிருத்திகை
13	25	வி	ஷ-54-4	ரோ-54-4	மர-60	சர்வமுகூர்த்தம்
14	26	வெ	சப்-53-19	மிரு-50-0	சித்த-60	கரிநாள்
15	27	ச	அ-17-4	திரு-46-11	சித்த-60	கிரகப்பிரீதி செய்ய
16	28	ஞா	நவ-42-15	புன-42-34	சித்த-60	ஸ்ரீராமநவமி
17	29	தி	தச-37-23	பூ-39-33	சித்த-60	கரிநாள் [கட்ட
18	30	செ	ஏ-33-15	அயி-37-15	சித்த-60	கிணற்றில் கல் கட்டடம்
19	31	பு	து-30-0	மக-35-53	சி-36 அ	சர்வமுகூர்த்தம்
20	1920ஸ்ரீ எப்பிரல்மீ 1	வி	திர-27-56	பூர-35-36	சித்த-60	கிணறு தோண்ட
21	2	வெ	ச-24-56	உத்-36-24	சித்த-60	பங்குனி உத்திரம்
22	3	ச	○-27-13	அஸ்-38-30	ம-60	....
23	4	ஞா	பிர-28-45	சி-41-47	சித்த-60	ஔஷதம் சாப்பிட
24	5	தி	து-31-30	சுவா-46-15	அ-46 ம	சர்வமுகூர்த்தம்
25	6	செ	தி-35-24	விசா-51-44	ம-52 சி	....
26	7	பு	ச-39-17	அனு-57-47	சித்த-60	கிழக்கே பிரயாணம்
27	8	வி	ப-44-51	கேட்-60-0	சித்த-60	விவாஹம், சீமந்தம்செய்ய
28	9	வெ	ஷ-49-53	கேட்-4-9	ம-4-அ	கிழங்குகள் நட
29	10	சனி	சப்-54-12	மூ-10-30	சித்த-60	ஆபரணம் தரிக்க
30	11	ஞா	அ-58-51	பூரா-16-31	சி-16 அ	இரத்னங்கள் வாங்க
31	12	தி	ந-60-0	உத்-21-37	அ-60	புண்யகாலம்

PRINTED AND PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR AT THE "ANANDA BODHINI" PRESS, 15, VENKATESA MAISTRY STREET, MADRAS.